பக்கங்கள் 16

விலை ரூ. 50

புதன் பொய்கை

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 193

புதன்கிழமை 07 ஜூன் 2023

வைகாசி 24 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054


படையினர் வசமுள்ளவற்றில்

# விடுவிக்கக்கூடிய காணிகளை உடன் அடையாளம் காண்க!

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து அதிகாரிகளுக்கு உத்தரவு

**யாழ்ப்பாணம், ஜூன் 7**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் படையினர் வசமுள்ள காணிகளில், விடுவிக்கக்கூடிய காணிகளை விரைந்து அடையாளம் காணுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. இது தொடர்பாக தனிக்குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.** »15

வற்றாப்பளைப் பொங்கலுக்கு சென்று திரும்பியபோது

## கோர விபத்தில் இளைஞன் பலி!



முல்லைத்தீவு, ஜூன் 7
முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் பொங்கல் உற்சவத்துக்குச் »15

## அரசவேலை தருவதாக மன்னாரில் பணமோசடி!

அவதானமாக இருக்குமாறு மாவட்டச் செயலர் அறிவுறுத்து

கழுத்தில் கயிற்றை மாட்டி

## வயோதிபப் பெண்ணின் நகைகள் கொள்ளை!

விரிவுகள்:- பக் - 15 இல்

நெடுந்தீவு படுகொலைகள்

## சந்தேகநபருக்கு மறியல் நீடிப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 7
யாழ்ப்பாணம், நெடுந்தீவில் இடம்பெற்ற 6 பேரின் கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. »15

## நாட்டைவிட்டு வெளியேற கஜேந்திரகுமாருக்குத் தடை!


நாடாளுமன்றில் இன்று சிறப்புரிமைப் பிரச்சினை

கொழும்பு, ஜூன் 7
நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாட்டை விட்டு வெளியேற கிளிநொச்சி நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது. இந்தநிலையில், நாடாளுமன்றத்தில் இன்று சிறப்புரிமைப் பிரச்சினையை கஜேந்திரகுமார் எழுப்பவுள்ளார். »15

## அமைச்சர் அலி சப்ரிக்கு புனர்வாழ்வு வழங்குக!

நாடாளுமன்றில் சிறீதரன் காட்டம்

கொழும்பு, ஜூன் 7
ஆயுதக் கலாசாரம் பற்றி பேசும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை புனர்வாழ்வுக்கு »15






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதாளக் குழுவினரைப் போன்று செயற்படுகின்றன சங்கங்கள்!

## நுகர்வோர் உரிமையைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜூன் 7**
**மூலப்பொருள்களின் விலைகள் அதிகரிக்கும்போது உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரிக்கும் சங்கங்களின் தலைவர்கள், மூலப்பொருள் விலை குறையும்போது குருடர்களாகி விடுகின்றனர். சங்கங்கள் பாதாளக் குழுவினரைப் போன்று மனச்சாட்சி இன்றிச் செயற்படுகின்றன.**

இவ்வாறு நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.
கொழும்பில் கடந்த திங்கட்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
எரிவாயுவின் விலை 452 ரூபாவால் குறைவடைந்துள்ளபோதும் வெதுப்பக உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க முடியாது என வெதுப்பக சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர். நாட்டில் உள்ள வெதுப்பகங்களில் 75 சதவீதமான வெதுப்பகங்கள் மின்சாரத்தில் இயங்குகின்றன என்று வெதுப்பக உரிமையாளர் சங்கத்தினர் குறிப்பிடுவது ஆச்சரியத்துக்குரியது.
மூலப்பொருள்களின் விலை அதிகரிக்கும்போது மறுகணமே உணவு பொருள்களின் விலையை அதிகரிக்கும் சங்கத்தின் தலைவர்கள் மூலப்பொருள்களின் விலை குறைவடையும் போது குருடர்களாகி விடுகின்றனர்.
கடந்த ஆண்டு எரிபொருள், மின்சாரக் கட்டணம் மற்றும் எரிவாயு அதிகரிக்கும்போது கட்டம் கட்டமாக உணவுப்பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டன.
நாட்டு மக்கள், பிரதானமாக நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தொழிற்சங்கத்தினர் பாதாளக் குழுவினரைப் போல் மனச்சாட்சி இல்லாமற் செயற்படுகிறார்கள்.
அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைவடைந்தாலும் அவற்றின் பயன் ஒட்டுமொத்த மக்களையும் சென்றடைவதில்லை.
வர்த்தகர்களும், தொழிற்சங்கத்தினரும் பயன்பெற்றுக்கொள்கிறார்கள்.
நாட்டில் நுகர்வோர் அதிகாரசபை என்பதொன்று உள்ளதா? என்ற சந்தேகம் காணப்படுகிறது. அத்தியாவசியப் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலை என்பதொன்று இல்லாததால் வர்த்தகர்களே விலைகளைத் தீர்மானித்துக் கொள்கிறார்கள்.
நுகர்வோர் இருந்தால்தான் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்பதை வர்த்தகர்கள் விளங்கிக் கொள்ளவேண்டும் - என்றார். (எ-இ)



# கேரளக் கஞ்சாவுடன் அல்வாய்வாசி கைது

யாழ்ப்பாணம், ஜூன் 7
பருத்தித்துறை திக்கம் மாணாண்டிப் பகுதியில் கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். நெல்லியடி அரச புலனாய்வுச் சேவைக்கு கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டார்.
சந்தேகநபரிடமிருந்து 2கிலோ 900 கிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது என்றும், அல்வாய் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த நெல்லியடிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-26)

# போதைக்கு அடிமையானவருக்கு கந்தகாட்டில் புனர்வாழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 7
போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞர் ஒருவர் நீதிமன்றின் ஊடாக கந்தகாடு போதைப்பொருள் தடுப்புப் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
மருத்துவ அறிக்கைகளின்படி இளைஞன் போதைப்பாவனைகளுக்கு உள்ளானவர் என்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில், 20 வயதான அந்த இளைஞர் நீதிமன்றத்தின் ஊடாக புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளார்.
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் இருந்து இதுவரை சுமார் 30க்கும் மேற்பட்டவர்கள் போதைப்பொருள் தடுப்பு புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (எ-ரி2-125)

# கஜேந்திரகுமாருக்கு அச்சுறுத்தல்; ம. உ. ஆணைக்குழு விசாரணை!

யாழ்ப்பாணம், ஜூன் 7
தமக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாளை (இன்று) வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய காரியாலய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (எ-26,27)

# மீள இயங்க ஆரம்பித்துள்ள மயிலிட்டி ஆ. சு. நிலையம்

யாழ்ப்பாணம், ஜூன் 7
மயிலிட்டி ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையம் 33 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.
இந்த ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையம் ஊடாக அருகில் உள்ள கிராமஅலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் தமது அடிப்படை மருத்துவ தேவையைப் பூர்த்தி செய்யமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
வெளிநோயாளர் சேவைகள் வாரத்தின் 7 நாள்களும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.
இந்தப் பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்தநிலையில், சில ஆண்டுகளுக்கு முன்னரே மக்களிடம் மீண்டும் கையளிக்கப்பட்டிருந்தது. (எ-ரி2)



# மன்னார் மீனவர்களுக்கு மானிய மண்ணெண்ணெய்

மன்னார், ஜூன் 7
சீன அரசாங்கத்தால் இலங்கை அரசுக்கு மானிய அடிப்படையிலான மண்ணெண்ணெய் மன்னார் மீனவர்களுக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதற்கட்டமாக வழங்கப்பட்டது.
படகொன்றுக்கு தலா 150 லீற்றர் வீதம் மன்னார் பள்ளிமுனையைச் சேர்ந்த 2 ஆயிரத்து 431 மீனவர்களுக்கு மானிய மண்ணெண்ணெய் பகிர்ந்தளிக்கப்பட்டது.
மன்னார் மாவட்டத்தின் ஏனைய பகுதி மீனவர்களுக்கு கட்டம்கட்டமாக மானிய மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல், மன்னார் கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கலிஸ்டன், கடற்றொழில் அமைச்சரின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் சந்துரு உட்பட கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்கேற்றனர். (ச-60.27)

# வீதியில் செய்த சாகசத்தால் கம்பி எண்ணும் இளைஞர்!

யாழ்ப்பாணம், ஜூன் 7
வீதியில் அதிவேகமாக வாகனத்தைச் செலுத்தி, போத்தலை உடைத்து மக்களை அச்சுறுத்தும் வகையில் "சாகசம்" காட்டிய 20 வயது இளைஞரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது மல்லாகம் நீதிமன்றம்.
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதி ஒன்றில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இளைஞர் "சாகசம்" காட்டியுள்ளார். அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சண்டிலிப்பாயைச் சேர்ந்த அந்த இளைஞரைக் கைது செய்துள்ளனர்.
சந்தேகநபர் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், சந்தேகநபரை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுமதி சேர் வரி முறைமை: மாற்றம் ஏற்படுத்த அனுமதி!

**கொழும்பு, ஜீன் 7**

**பெறுமதி சேர் வரி விடுவித்தலின் அடிப்படை விதிமுறை மற்றும் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியளிப்பு வேலைத்திட்டத்துக்கு அமைய பெறுமதி சேர் வரி தொடர்பான முக்கியமான இரு மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள பெறுமதி சேர் வரியை விடுவித்தல் அடிப்படை விதிமுறைகளுக்கு அமைய அண்ணளவாக மொத்தத் தேசிய உற்பத்தியின் 1.2 வீதமான வரி வருமானத்தை அதிகரிக்க வாய்ப்புண்டு.

கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளுக்கான விடுவிப்புக்களைப் போன்றே, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மீதான அழுத்தங்களை இலகு படுத்துகின்ற மற்றும் பொருளாதாரத்தின் முக்கியமான துறைகளைப் பாதுகாக்கின்ற விடுவிப்புக்கள் தொடர்ந்தும் பேணப்படும். அத்தோடு பெறுமதி சேர் வரி விடுவிப்புக்களில் இருந்து அதிகளவை நீக்குவதற்கும், பெறுமதி சேர் வரியை மீளச் செலுத்துவதற்காக மிகவும் முறைசார்ந்த பொறிமுறை ஒன்றை அறிமுகப்படுத்தி தற்போது நடைமுறையில் உள்ள இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையை எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அகற்றுவதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (எ-இ)

# பிளாஸ்ரிக் பாவனை: சோதனை ஆரம்பம்!

கொழும்பு, ஜீன் 7

தடை செய்யப்பட்ட பிளாஸ்ரிக்கால் உருவான பொருள்களை விற்பனை செய்வோர் தொடர்பான சோதனைகள் நேற்றுமுதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒருமுறை பயன்படுத்திக் கழிக்கப்படும் பிளாஸ்ரிக் ஸ்ரோ மற்றும் கரண்டிகள், ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் தட்டுக்கள், கப், கரண்டி, முட்கரண்டி, கத்திகள், பிளாஸ்ரிக் மலர் மாலைகள் போன்றவற்றுக்கு மத்திய சுற்றாடல் அதிகார சபை தடை விதித்துள்ளது.

அவற்றால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் கருத்தில் கொண்டு இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், இறக்குமதி செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவற்றைப் பயன்படுத்தும், விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கஜேந்திரகுமார் எம்.பி.க்கு எதிராக மனு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு எதிராக சபாநாயகரிடம் மனுக் கொடுப்பதற்கும் கஜேந்திரகுமாருக்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கும் சிங்கள ராவய திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாடாளுமன்ற வரப்பிரசாதங்களை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீறியுள்ளார் என சிங்கள ராவய தனது மனுவில் குறிப்பிடவுள்ளது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

## கஞ்சா ஏற்றுமதிச் சந்தையை இனங்காண்பதற்கு ஆய்வுகள்

கொழும்பு, ஜீன் 7

கஞ்சா ஏற்றுமதி மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கான உலக சந்தை வாய்ப்புக்கள் தொடர்பில் இலங்கை ஏற்றுமதி அதிகாரசபை ஆராய்வுகளை மேற்கொண்டுள்ளது.

இலங்கை ஏற்றுமதி அதிகார சபையின் தலைவர் கலாநிதி கிங்ஸ்லி பெர்னாண்டோ இந்தத் தகவலை கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் இருந்து கஞ்சாவை ஏற்றுமதி செய்வதற்கான சந்தைகள் எவை என்பதைக் கண்டறிய நாங்கள் தற்போது ஓர் ஆய்வை மேற்கொண்டுள்ளோம். அவை இன்னமும் நிறைவு பெறவில்லை. ஏற்றுமதித் தயாரிப்புப் பணிகள் முடிவு செய்யப்பட்ட பின்னரே ஏற்றுமதிச் சந்தையில் கிடைக்கும் வாய்ப்புக்களை அடையாளம் காணமுடியும்.

நாம் இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளோம். கஞ்சா தயாரிப்புக்களை ஏற்றுமதி செய்ய வேண்டுமானால் அவையின் மதிப்புக்கூட்டப்படவேண்டும். அதனால் நாங்கள் வகைகள் மற்றும் தயாரிப்புக்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தியுள்ளோம் - என்றார். (எ-இ)

# மகளைத் துஷ்பிரயோகம் செய்த தந்தைக்கு 110 ஆண்டுகள் சிறை!

கொழும்பு, ஜீன் 7

11 வயது மகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய தந்தைக்கு 110 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது பலப்பிட்டிய நீதிமன்றம். குற்றவாளிக்கு 8 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், 6 லட்சம் ரூபா நட்டஈடு வழங்கவேண்டும் என்றும் கட்டளையிட்டது.

2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் சந்தேகநபர் தனது மகளைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்று ஊரகஸ்மங்ஹந்திய பொலிஸார் வழக்குத் தாக்கால் செய்திருந்தனர்.

சிறுமியின் தாய் வெளிநாட்டுக்குச் சென்றிருந்த நிலையில், தனது தந்தை மதுபோதையில் வந்து தன்னை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்துகிறார் என்று சிறுமி அயலவருக்குத் தெரிவித்ததை அடுத்து, இந்த விடயம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபரான தந்தை கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ள நிலையில், 110 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)




கம்பஸ் கொழுவல் பற்றி பட்சி நேற்றுக் கொஞ்ச விசயங்களைச் சொன்னதெல்லோ. அந்தக் கொழுவலில தொடர்புள்ள 31 பேருக்கு வகுப்புத்தடை போட்டகையோட விசாரணைக்கும் நாள் குறிச்சாச்சாம். இண்டைக்குத்தான் அந்த விசாரணை. அதுக்கு முதல் சண்டை பிடிச்ச ரண்டு தரப்பையும் ஒரு சமரசத்துக்கு கொண்டுவர, அவையின்ர மாணவர் ஒன்றியம் கடைசி நேர முயற்சி ஒண்டு எடுத்திருக்கு. ரண்டு தரப்பையும் கூப்பிட்டு, 'நீங்கள் ஒரு தரப்பு மற்றத்தரப்பைக் காட்டிக் குடுத்தால், எல்லாருக்கும் பாதிப்பு. அதால இனி ஆரில சரி, பிழை எண்டு வாக்குவாதப்படாமல் ரண்டு தரப்பும் ஒத்துப்போனால் தான் பிரச்சினையில்லாம முடிக்கலாம். எங்கட பீடத்துக்கும் இதால கெட்டபேர். யோசிச்சு முடிவெடுங்கோ. எக்ஸாமும் வருகுது. இப்பிடி பிரச்சினைப்பட்டு வாழ்க்கையைப் பழுதாக்காதையுங்கோ' எண்டு 'அட்வைஸ்' சொல்லி, ஒரு இணக்கப்பாட்டுக்கு கொண்டந்திருக்கினம். ஆனாலும், இந்த இணக்கப்பாட்டால, பிழை செய்யாதவை மட்டுமில்ல, தொடர்ந்தும் சண்டைக்கோழியா நிக்கிறவையும் தப்பப்போயினம் எண்டதுதான் ஒரு நெருடல்.

⅄ ⅄ ⅄

முல்லைத்தீவு வலயத்தில இருக்கிற ஒரு பள்ளிக்கூடத்து 'புட்போல் ரீம்' பற்றியும் பட்சி சொல்லியிருந்ததை மறந்திருக்கமாட்டியள். 19 வயசுப்பிரிவில, 16 வயசுப்பிள்ளையளும் விளையாடினதால அந்த அணி, மாகாண மட்டப்போட்டியில விளையாடத் தகுதி இல்லை எண்டு சொல்லிட்டினம். அப்ப அவை கோட்ட மட்டம், வலய மட்டங்களில விளையாடேக்க ஏன் அந்த வயசுப் பிரச்சினையை அதுக்குப் பொறுப்பான ஆக்கள் கண்டுபிடிக்கேலை? இல்லாட்டி விசயம் தெரிஞ்சும் அவை கண்டும் காணாமல் இருந்திட்டினமா? எண்டெல்லாம் மேல்மட்டக்காரருக்கு குழப்பமாம். அந்தக் குழப்பத்தைத் தீர்க்கிறதுக்கும் இனிமேல் இப்பிடியான பிரச்சினையள் வராமல் இருக்கவும் ஒரு குழுவை வடமாகாணப் பணிப்பாளர் நியமிச்சிருக்கிறாராம். அந்தக்குழுவின்ர அறிக்கையை வைச்சு, பிழை விட்ட எல்லார் மீதும் நடவடிக்கை எடுக்கிறதுக்கும் ஆயத்தம் நடக்குதாம். அதால அந்தப் போட்டியளை நடத்தினவை கடுகு திண்ட குரங்கு மாதிரி கலக்கத்தில இருக்கினமாம்.


⅄ ⅄ ⅄

முந்தநாள் உலக சுற்றுச்சூழல் தினம். அதுக்காக கன இடங்களில மரநடுகை, விழிப்புணர்வு எண்டு கனக்க நிகழ்வுகள் பரவலா நடந்தது. அப்பிடி ஒரு நிகழ்வுக்கு போட்டு வந்தவர் சொன்ன தகவல் இது -

இந்தமுறை பிளாஸ்ரிக்கால வாற மாசடைவத் தடுக்க வழிதேடவேணும் எண்ட கருப்பொருளிலதான் சுற்றுச்சூழல் தினத்தை நடத்த வேணும் எண்டு ஐ.நா. அறிவிச்சிருந்தது. நிகழ்வில பேசின எல்லாரும் பிளாஸ்ரிக்கின்ர தீமை, அதைத் தடுக்கிறதுக்கான வழி, பிளாஸ்ரிக்குக்கு பதிலா வேற என்னென்னத்தைப் பாவிக்கலாம் எண்ட வழிமுறையள் பற்றியெல்லாம் வடிவாச் சனத்துக்குச் சொன்னவை. அப்பிடி அவை சொல்லிக் கொண்டிருக்கேக்கையே எல்லாருக்கும் 'வண்டே' கப்பில குளிர்பானமும், பிளாஸ்ரிக் தட்டில பலகாரமும் கொண்டு வந்தவை. இவையெல்லாம் பிளாஸ்ரிக்கை ஒழிச்ச மாதிரித்தான். பேசாமல் உந்த நிகழ்வை நடத்தாமல் விட்டிருந்தாலே, நிகழ்வுக்கு பாவிச்ச 'வண்டே' கப் பாவனையை தடுத்திருக்கலாம். இப்பவெல்லாம் விழிப்புணர்வு எண்டிட்டு இப்பிடியான வேலையள் தான் நடக்குது

- என்று அவர் தன்ர மனசுக்க இருந்ததைக் கொட்டித் தீர்த்தார். அவர் சொல்லேக்க பட்சிக்கு ஒரு கவிதை வரி நினைவுக்கு வந்தது.

*'விழிப்புணர்வைப் பற்றி*
*விடிய விடியப் பிரசங்கம்*
*முடிந்து போகையில்*
*பாய்களையே பரிசளிக்கிறார்கள்'*



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாதனை படைத்த 'ஷோயி'

நியூயோர்க், ஜூன் 7

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தில் உள்ள "ஷோயி" என்ற ஜேர்மன் ஷெப்பேர்ட் இன நாய் கின்னஸ் சாதனை ஒன்றைப் படைத்துள்ளது.

உலகிலேயே மிக நீளமான நாக்கைக் கொண்டுள்ளது என்ற சாதனையைப் படைத்துள்ள "ஷோயி"யின் நாக்கின் நீளம் 12.7 சென்றிமீற்றர். (எ-இ)

## சிறுமியின் விளையாட்டால் பெற்றோருக்கு மாரடைப்பு!

பீஜிங், ஜூன் 7

இணையவழி விளையாட்டில் சிறுமி ஒருவர் 4 மாதங்களில் இலங்கை நாணயப் பெறுமதியில் சுமார் ஒரு கோடி ரூபாவை செலவு செய்து பெற்றோருக்கு அதிர்ச்சி கொடுத்துள்ளார்.

இந்தச் சம்பவம் சீனாவின், ஹெனான் மாகாணத்தில் நடந்துள்ளது.

இந்த 13 வயதுச் சிறுமி பாடசாலையில் அதிகநேரத்தை கைபேசியுடன் செலவிடுவதை அவதானித்த ஆசிரியர் அது தொடர்பில் சிறுமியின் பெற்றோருக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றார். சிறுமியின் கைபேசியை வாங்கிப் பரிசோதித்தபோது அதில் தாயின் வங்கி அட்டை இணைக்கப்பட்டிருந்தது.

சந்தேகம் அடைந்த தாய் தனது வங்கிக் கணக்கை ஆராய்ந்தபோது பெரும் அதிர்ச்சிக்குள்ளானார். அதில் 0.5 யுவான் மட்டுமே இருந்துள்ளது. அதிலிருந்த 52 லட்சம் யுவான் மாயமாகியிருந்தது.

அதன்பின்னர் சிறுமியிடம் விசாரித்தபோது அவர் கூறியவற்றைக் கேட்ட குடும்பத்தினருக்கு தலைசுற்றியிருக்கின்றது.

தாயின் வங்கி அட்டை மற்றும் இரகசிய இலக்கத்தை அறிந்து கொண்ட சிறுமி அதைப் பயன்படுத்தி பணத்தை இணையவழி விளையாட்டில் வாரி இறைத்துள்ளார்.

அதுமட்டுமன்றி தனது நண்பர்களுக்கும் இணையவழி விளையாட்டுக்களை வாங்கிப் பரிசளித்துள்ளார். இவர் இந்தத் தொகையை வெறும் 4 மாதங்களில் செலவு செய்திருக்கின்றார். அந்தக் குடும்பத்தின் வாழ்நாள் சேமிப்பு முழுவதும் தற்போது கரைந்துவிட்டது.

இந்தச் சம்பவம் அந்த நாட்டு ஊடகங்களில் முதன்மை பெற்றிருக்கின்றது. (எ-இ)



அமெரிக்காவின் மாசசூசெட்ஸின் ஸ்பென்சரில் உள்ள 160 ஆண்டுகள் பழமைமிக்க காங்கிரேஷனல் யுனைடெட் என்ற தேவாலயம் மின்னல் தாக்கித் தீக்கிரையாகியுள்ளது. இந்தத் தீ விபத்தில் தேவாலயத்தின் மேற்கோபுரம் நொருங்கிக் கீழே வீழ்ந்துள்ளது. இந்தத் தேவாலயம் 1740ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டப்பட்டுள்ளது. 1862ஆம் ஆண்டு தீயால் சேதமடைந்த இந்தத் தேவாலயம் 1863ஆம் ஆண்டு மீள்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது. (எ-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சியான நாள். மனதில் தைரியம் அதிகரிக்கும். எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிணக்குகள் நீங்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாயின் உடல்நலனில் கவனம் தேவை. பிற்பகலுக்குமேல் பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

**மிதுனம்** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். கடவுளை வழிபட சங்கடங்கள் நீங்கும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். ஆதாயம் ஏற்படும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவு செய்ய நேரிடும். மற்றவர் களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாய்மாமன் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். முயற்சிக்கு மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** பணவரவு திருப்தி தரும். உடல்நலனில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்படும். மனதில் அடிக்கடி குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் ஏற்படும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடிவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஆதாயம் உண்டாகும்.

**விருச்சிகம்:** காரியங்கள் அனுகூலமாகும். உங்கள் பொறுப்புகளை பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். மனவருத்தங்கள் நீங்கும். பண உதவி கிடைக்கும்.

**தனுசு:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். மன தில் உற்சாகம் அதிகரிக்கும். விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். சுபநிகழ்ச்சி இடம்பெறும்.

**மகரம்:** பணவரவு இருந்தாலும் திடீர்ச் செலவுகளும் ஏற்படும். எதிர் பார்த்த காரியம் இழுபறியாகும். மன வருத்தம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். செலவு செய்ய நேரிடும். வீண் விவாதத்தில் ஈடுபட வேண்டாம். எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.



## நீறுபூத்த நெருப்பாக தகிக்கும் மணிப்பூர்!

புதுடில்லி, ஜூன் 7

இந்தியாவின் மணிப்பூர் மாநிலத்தில் நேற்றுமுன்தினம் மீண்டும் வன்முறை ஏற்பட்டுள்ளது. அதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர், நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

மணிப்பூரில் பள்ளத்தாக்கில் வசிக்கும் மெய்த்தி சமூகத்தவர்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் இடையே முரண்பாடுகள் நிலவி வருகின்றன. மெய்த்தி சமூகத்தவர்கள் தங்களுக்கும் பழங்குடி அந்தஸ்து வழங்கவேண்டும் என அரசை வலியுறுத்தினர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த மாதம் 3ஆம் திகதி பழங்குடி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதையடுத்து மாநிலத்தில் வன்முறைகள் ஏற்பட்டன.

இந்த வன்முறைகள் காரணமாக இதுவரை 80 பேர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கானவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

இன்னமும் மாநிலத்தில் இயல்பு நிலைமை திரும்பாத நிலையில் நேற்றுமுன்தினமும் வன்முறைகள் நடந்துள்ளன. (எ-இ)

## தம்பியை காப்பாற்றிய அண்ணன்

சென்னை, ஜூன் 7

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு நடந்த ரயில் விபத்து உலகத்தை உலுக்கியுள்ளது. அதில் சுமார் 300 பேர் வரையில் உயிரிழந்திருக்கும் நிலையில், விபத்தில் இறந்த ஏழு பேரின் உடல்களின் கீழ் சிக்கித் தவித்த தம்பியை சகோதரன் காப்பாற்றிய சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

ஒடிசா, போக்ராய் கிராமத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றும் அந்த ரயிலில் பயணித்துள்ளது. 10 வயதான தேபேசிஷ் பத்ரா, தந்தை, தாய், சகோதரன் ஆகியோருடன் பத்ராத் பகுதியில் உள்ள தனது மாமா வீட்டுக்குப் பயணித்துள்ளனர். அப்போது தான் ரயில் பாலசோர் அருகே விபத்துக்குள்ளானது.

"பாலசோர் ரயில் நிலையம் தாண்டியதும் திடீரென ரயில் பெட்டி பயங்கர சத்தத்துடன் குலுங்கியது. நான் மயக்கம் அடைந்து விட்டேன். என்ன நடந்தது என்று தெரியவில்லை. கண்ணைத் திறந்து பார்த்தபோது பயங்கர வலியாக இருந்தது. என் மீது இறந்தவர்களின் பல உடல்கள் கிடந்தன. எனது அண்ணன் சுபாசிஷ்தான் உடல்களிடையே தேடி என்னைக் காப்பாற்றினான்" என்று தேபேசிஷ் பத்ரா விபத்தை விவரித்துள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முட்டைக்கு ஏன் தட்டுப்பாடு?

வடக்கு மாகாணத்தில் முட்டை உற்பத்தி மந்தநிலையில் உள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதே வேளை நாட்டில் உணவுப் பாதுகாப்பின்மை அதிகம் உள்ள பிரதேசமாக வடக்கு அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தநிலையில் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். ஏனெனில், ஏழைகளுக்கு எட்டக்கூடிய ஒரேயொரு நிறையுணவு முட்டைதான். நாடு முழுவதும் தற்போது முட்டை உற்பத்தி மந்தமாகியிருக்கின்றது. அதற்கு கோத்தாபய ராஜபக்ச அரசாங்கம் கொண்டுவந்த கோழித்தீவன இறக்குமதித் தடைதான் பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது. ஆயினும் வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் எப்போதும் முட்டை உற்பத்தி மந்த நிலையிலேயே இருக்கின்றது.

போர் இடம்பெற்ற காலப்பகுதியில் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில்கூட மக்களின் போஷாக்கு நிலைமை ஒரு மட்டத்தில் பேணப்பட்டிருந்தது. உள்ளூரில் உருவாக்கப்பட்ட போசணை உணவுகளாலேயே இந்த நிலைமையை அப்போது பேண முடிந்தது. பிரதானமாகக் குறிப்பிட வேண்டுமானால் முட்டை, பால் உற்பத்திகள் அப்போது போதியளவில் காணப்பட்டன. எல்லாவீடுகளிலும் நாலைந்து கோழிகளும், பசுக்களும் இருந்தன. அதனால் முட்டைக்கும், பாலுக்கும் தட்டுப்பாடான நிலைமை போர்க்காலத்தில் தோன்றியதில்லை. அந்தக் காலத்தில் இப்போதுள்ளதைப் போன்று புறொய்லர் கோழி வளர்ப்பு இருந்ததில்லை. வீடுகளில் வளர்க்கப்படும் ஊர்க்கோழிகளே மக்களின் முட்டைத் தேவைகளைப் பூர்த்தி செய்தன. இப்போது ஊர்க்கோழிகள் மற்றும் ஊர் முட்டைகளுக்கான கேள்வி உள்ளபோதும் கோழி வளர்ப்பில் எவரும் நாட்டம் கொள்வதில்லை.

போரின் பின்னரான காலப்பகுதியில், பாதிக்கப்பட்டோருக்கான வாழ்வாதார உதவிகளாக பெரும்பாலும் கோழிவளர்ப்புக்கான திட்டங்களே பலராலும் வழங்கப்படுகின்றன. கிட்டத்தட்ட 14 வருடங்களாக இப்படி கோழிவளர்ப்புக்கான திட்டங்கள் ஏராளமானோருக்கு வழங்கப்பட்டபோதும், அவை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. பலரும் வளர்ப்புக்கான கோழிகளை அவை கிடைத்த சிலநாள்களிலேயே இறைச்சிக்காக விற்பனை செய்த சம்பவங்களே அதிகம். இவ்வாறு உரிய நோக்கத்தை கோழிவளர்ப்புத் திட்டங்கள் அடையாததன் விளைவே இன்று முட்டைக்கான தட்டுப்பாடாக உருவெடுத்து நிற்கின்றது. புறொயிலர் கோழி வளர்ப்பு, முட்டைக் கோழி வளர்ப்பு என்ற வழிவகைகள் இருந்தும் மாகாணத்தில் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு முட்டை உற்பத்தி இல்லை என்பதும், முட்டைகளுக்குக்கூட இறக்குமதியை எதிர்பார்க்க வேண்டிய நிலைமை தோன்றியிருப்பதும் ஆரோக்கியமானதல்ல. அதற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்வதும் அவசியமானது.

வடக்கு மாகாணத்தில் முட்டைக்கான தேவை அதிகமாகவுள்ளபோதும், பண்ணைகளை அமைத்து முட்டைத் தேவையைப் பூர்த்தி செய்ய எவரும் முன்வருவது இல்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. துறைசார்ந்த திணைக்களங்களால் அதற்குரிய உதவிகள் வழங்கப்பட்டாலும் அதை நாடுவோர் சிலரே. போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கும் புலம்பெயர்ந்தோர் இவ்வாறான விடயங்களிலும் கவனம் செலுத்தவேண்டும். தனித்தனியே உதவிகளை வழங்கி அவை பயனற்றுப் போவதைவிடவும், பண்ணைகளை அமைத்து போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவது ஓரளவுக்குப் பயனளிக்கும். துறைசார்ந்த அதிகாரிகள் அதற்கான வழிப்படுத்தல்களை வழங்கவேண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

“தோல்விகளை ஒப்புக்கொள்ளத் தயங்காதே. தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது”

– லெனின்



# அரசாங்கத்துக்கு எதிராக மீண்டும் போராட்டங்கள்!

**கொழும்பு, ஜுன் 7**

**இந்தவாரம் கொழும்பில் அரசுக்கு எதிரான போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தி மற்றும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பவை இணைந்து இந்தப் போராட்டங்களை ஏற்பாடு செய்யவுள்ளன.**

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இன்று புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளது என்று அறிவித்துள்ளது.

மஹாபொல மாணவர் புலமைப்பரிசில் கொடுப்பனவு, வாழ்க்கைச்செலவு, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல் போன்ற பல முக்கியமான கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள தாமதத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், தேசிய மக்கள் சக்தி ராஜகிரியவில் உள்ள தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு வளாகத்தில் நாளை வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளது.

தேர்தலில் போட்டியிடவிருந்த வேட்பாளர்கள் உள்ளிட்டோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர். அத்துடன் தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தி அறிவித்துள்ளது.

தேர்தலைத் தாமதப்படுத்துவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முக்கியமான நோக்கம் என குற்றம் சுமத்தியுள்ள தேசிய மக்கள் சக்தி, தற்போது தேர்தலை நடத்தாததற்கு பொருளாதார அல்லது நிதி நெருக்கடி எதுவும் இல்லை எனவும் தெரிவித்துள்ளது. (எ-இ)

# இலங்கைப் பொறிமுறை எமக்கு நீதியைத் தராது

## காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் அதிருப்தி

அரசாங்கம் கொண்டுவரும் உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறை ஊடாக நீதி கிடைக்கும் என்பதில் எமக்கு நம்பிக்கையில்லை என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுக்கும் வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்க உறுப்பினர்களுக்கும் இடையே கலந்துரையாடல் யாழிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த மனிதஉரிமை, மத சுதந்திரம் மற்றும் நீதி பொறிமுறை துறைகளைச் சார்ந்த அமெரிக்க அதிகாரிகள் பங்கேற்றனர்.

தென்னாபிரிக்காவில் நிறுவப்பட்டதை போன்று உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை இலங்கையில் ஸ்தாபிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தென்னாபிரிக்க - இலங்கை கூட்டுச் செயற்குழுவின் பொறிமுறையில் எமக்கு நீதி கிடைக்கப்பெறும் என்பதில் நம்பிக்கையில்லை. காலத்தை இழுத்தடிப்புச் செய்யும் அரசாங்கத்தின் கண்துடைப்பே இதுவாகும் என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-7)

**நாளை**

**08.06.2023**
**வியாழக்கிழமை**
**வைகாசி 25**

சுபநேரம் : 07.22 - 08.52
ராகுகாலம் : 01.22 - 02.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு மாதங்களின் பின்னர் கியூ.ஆர். தேவையில்லை!

## வலுசக்தி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

**எதிர்வரும் இரண்டு மாதங்களில் எரிபொருள் ஒதுக்க முறைமையை (கியூ.ஆர்) நீக்க முடியும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவித்தார்.**

திவுலப்பிட்டியில் நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலைத்திருத்தம் முன்னெடுக்கப்படுவதால் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் மாத இறுதியில் எரிபொருள் முன்பதிவை தாமதமாக்குகின்றனர். அவர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கியூ.ஆர். முறைமை நடைமுறையில் உள்ளதால் எரிபொருளுக்காக வரிசைகள் ஏற்பட்டுள்ளன. இன்னும் இரண்டு மாதங்களில், 150 நிரப்பு நிலையங்களுடன் 'சினோபெக்' நிறுவனம் விநியோக நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளது. அந்த நிறுவனம் விநியோகத்தை ஆரம்பித்ததன் பின்னர், அது தொடர்ச்சியாக எரிபொருளை விநியோகிக்கும். அதன்பின்னர் தற்போது நடைமுறையில் உள்ள கியூ.ஆர். குறியீட்டு முறைமை நீக்கப்படும் - என்றார். (எ-இ)



புதுக்குடியிருப்பு

## தேக்கம் காட்டுக்கு விஷமிகள் தீ வைப்பு

முல்லைத்தீவு, ஜூன் 7

புதுக்குடியிருப்பு கேப்பாப்புலவு பகுதியில் அமைந்துள்ள தேக்கம்காடு விஷமிகளால் தீ வைக்கப்பட்டு எரிந்தவண்ணம் உள்ளது.

நேற்றுமுன்தினம் இந்த அசம்பாவிம் ஏற்பட்டது. பின்னர் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. சுமார் 200 மீற்றர் வரையிலான பகுதியில் தீ பரவியது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-113)

## தூக்கிலிருந்து சடலம் மீட்பு!

நீண்ட காலம் சுகவீனமுற்றிருந்த வயோதிபர் ஒருவர் தூக்கிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நுணாவில் கிழக்கு சாவகச்சேரி பகுதியில் வசித்துவந்த 81 வயதுடைய முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி நீதிவான் அவர்களின் பணிப்பின் பிரகாரம் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி திருமதி சி.தவமலர் மரண விசாரணையை மேற்கொண்டு, சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-159)



தொல்புரம் ஆரம்ப மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பெற்ற வாகனத் தரிப்பிடம் மற்றும் நோயாளர் காத்திருக்கும் மண்டபம் என்பன நேற்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டன. 'சுப்பையா பொன்' ஞாபகார்த்தமாக, அவரது மகன் சுப்பையா வரதராசாவின் நிதி அனுசரணையில் நோயாளர் காத்திருப்பு மண்டபம் அமைக்கப்பட்டதுடன், அமரர்கள் துரைசிங்கம் சிவபாக்கியம் ஞாபகார்த்தமாக அவர்களது மகன் து.சிவகுமாரின் நிதி அனுசரணையில் வாகனத் தரிப்பிடமும் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-20-27)



## யாழ்ப்பாணப் பல்கலையில் திருஞானசம்பந்தர் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 7

சைவசமய குரவர்களில் இளையவரான திருஞானசம்பந்தர் குருபூசையை முன்னிட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறை, உயர் பட்டப் படிப்புகள் பீட சைவசித்தாந்த முதுமாணி கற்கை அணியினர் இணைந்து நடத்திய திருஞானசம்பந்தர் விழா நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் மேற்படி பல்கலைக்கழக சைவசித்தாந்தத் துறைத் தலைவர் பொன்னுத்துரை சந்திரசேகரம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர்பட்டப் படிப்புகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் செ.கண்ணதாசன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (ம-66, 125)

## இயல்பு நிலையை ஏற்படுத்துவது அனைவரினதும் இணைந்த முயற்சி!

### பிரதம நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 7

நாட்டில் இயல்பு நிலைமையை ஏற்படுத்துவது அனைவரினதும் இணைந்த முயற்சி என்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தெரிவித்தார்.

நுவரெலியாவில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த சில வருடங்களில் பல சவால்களுக்கு மத்தியிலும் சட்டத்தரணிகள் சங்கம் தனது உறுப்பினர்களை ஒன்றுதிரட்டி பல்வேறு கருப்பொருள்களின் கீழ் மாநாடுகளை நடத்தியது.

'சட்டத் தொழிலின் இயலுமையை மீள்கட்டமைத்தல் மற்றும் இசைவாக்கமடைதல், இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒரு நெருக்கடியின் ஊடாக பயணித்தலில் சட்டத்தின் வகிபங்கு' என்ற 2022ஆம் ஆண்டுக்கான கருப்பொருளின் கீழ் நாங்கள் ஒன்றிணைந்தோம்.

கொரோனாத் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாங்கள் அனைவரும் முன்னொருபோதும் இல்லாத சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் இருந்து விடுபட்டு இயல்பு நிலைக்குத் திரும்பவும், வாழ்வில் முன்னேறவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது நம் அனைவரினதும் பொறுப்பு என நாங்கள் நம்புகிறோம் - என்றார். (எ-இ)



## மருதனார்மடம் சந்தையில் தூய்மைப்பணிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 7

மருதனார்மடம் பொதுச்சந்தை அமைந்துள்ள பிரதேசத்தை அழகுபடுத்தும் வேலைத் திட்டத்துக்கு அமைவாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தூய்மைப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் உடுவில் உப அலுவலக ஊழியர்களும் மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரிகளும் இணைந்து இந்தத் தூய்மைப் பணியை முன்னெடுத்தனர். (ம-125)



## பொன். சிவகுமாரனுக்கு பல்கலையில் அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஜூன் 7

தியாகி பொன்.சிவகுமாரனது 49 ஆவது நினைவேந்தல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது. பொன். சிவகுமாரனின் உருவப்படத்துக்கு ஈகைச் சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது. பெருமளவான மாணவர்கள் இந்த அஞ்சலியில் உணர்வு பூர்வமாகக் கலந்துகொண்டனர். (ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை



> "கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை
> உண்மையான் உண்டிவ் வுலகு." -வள்ளுவர்

ந.பரமேஸ்வரன்

# உலகின் உயரத்தில் ஓர் ஈழத்தமிழன்!



கனேடியர்களும் அமெரிக்கர்களும் அதிகளவு சொந்தம் கொண்டாட மேற்கொண்டிருந்த முயற்சியொன்று ஈழத் தமிழனின் வசப்பட்டிருக்கின்றது. எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்து, இந்த மைல்கல்லை எட்டிய முதலாவது ஈழத்தமிழன் என்ற பெயரைப் பெற்றிருக்கின்றார் உரும்பிராயைச் சேர்ந்த விவேகானந்தன் துஷ்யந்தன் என்ற இளைஞன். எவரெஸ்ட் சிகரத்தில், இதுவரையில் அடையாளப் படுத்தப்பட்டுள்ள அதன் உச்ச எல்லையான 8 ஆயிரத்து 849 மீற்றர் தூரத்தைக் கடந்த 18ஆம் திகதி அடைந்திருக்கின்றார் விவேகானந்தன் துஷ்யந்தன்.

ஆரம்பக் கல்வியை உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் கற்றுத் தேர்ந்த துஷ்யந்தன், பின்னர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார். சிறுவயது முதல் உயரமான பகுதிகளில் ஏறுவதைத் தனது பொழுதுபோக்காகக் கொண்டிருந்த துஷ்யந்தன், காலவோட்டத்தின் இந்தத் துறையில் தன்னை வளப்படுத்திக் கொண்டார். அதுவே இவர் எவரெஸ்ட் சிகரத்தை அடைவதற்கு பிரதான உந்துசக்தியாக இருந்தது.

1990ஆம் ஆண்டு நாட்டை விட்டு புலம்பெயர்ந்த துஷ்யந்தன். பல்வேறு நாடுகளுக்கும் சென்று இறுதியில் லண்டனில் தஞ்சமடைந்தார். மலை ஏறுவதில் ஆர்வமுடைய துஷ்யந்தன் கடந்த வருடம் மலேசியாவிலுள்ள கினபாசு மலையில் தனது மைத்துனர் பிரசாத்துடன் இணைந்து ஏறியுள்ளார். கினபாசு மலையில் ஏறிய பின்னர், துஷ்யந்தனின் வழிகாட்டி யன் தப்பா வழங்கிய உந்துதலே எவரெஸ்ட் சிகரம் என்ற பிரமாண்டமான சாதனையை அவர் நிலைநாட்டக் காரணமாக அமைந்தது.

**எவரெஸ்டை தொடும் முயற்சி**

ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி நேபாள தலைநகர் காத்மண்டுவுக்கு வந்து எவரெஸ்ட் சிகரத்தை தொடும் முயற்சியை ஆரம்பித்துள்ளார். மெதுமெதுவாக ஏறி 14 நாள்களின் பின் 5 ஆயிரத்து 364 மீற்றர் உயரத்தை அடைந்துள்ளார். எவரெஸ்ட்டை அடைவதற்காகக் கடந்துசெல்ல வேண்டிய பாதையில் முதலாவது முகாம் இங்குதான் உள்ளது. நான்கு முகாம்களைக் கடந்தே எவரெஸ்ட் சிகரத்தை அடையவேண்டும். முதலாவது கீழ் தளம், அடுத்தது முதல் தளம். இது 6 ஆயிரம் மீற்றர் உயரத்தில் உள்ளது. இரண்டாவது தளம் 6 ஆயிரத்து 400 மீற்றர் உயரத்தில் உள்ளது. மூன்றாவது தளம் 7 ஆயிரத்து 300 மீற்றர் உயரத்தில் உள்ளது. நான்காவது தளம் 7 ஆயிரத்து 925 மீற்றர் உயரத்தில் உள்ளது.

நான்காவது தளத்தில் சுவாசிப்பது கஷ்டமாக இருக்கும். நரம்புகள் இழுக்கத்தொடங்கும். "நல்ல வேளையாக நான் ஒட்சிசன் சிலிண்டர்களையும் மாஸ்குகளையும் எடுத்து வந்திருந்தேன். இந்த இடத்தில் இருதய அழுத்தம், பக்கவாதம் போன்றன ஏற்படும். இந்த இடத்தை உயிராபத்தான பிரதேசம் என அழைப்பர். நாங்கள் மலை உச்சியை அடைந்த போது வெப்பநிலை மைனஸ் 40 செல்சியசாக காணப்பட்டது. மே 18ஆம் திகதி காலநிலை ஓரளவு சீராகக் காணப்பட்டது அன்றைய தினம் நாங்கள் எவரெஸ்ட் சிகரத்தை அடையத் திட்டமிட்டிருந்தோம். 17ஆம் திகதி இரவு 9 மணிக்கு நான்காவது தளத்திலிருந்து புறப்பட்டு 15 மணித்தியாலம் 49 நிமிடங்கள் பயணித்த பின்னர் 18ஆம் திகதி 12.49 மணிக்கு எவரெஸ்ட் சிகரத்தை அடைந்தோம்.

**அனுபவப்பகிர்வு**

எவரெஸ்டில் ஏறிய அனுபவம் சுவாரஸ்யமும் திகிலும் நிறைந்தது. ஆங்காங்கே மலையிலிருந்து இறங்க முடியாமல் உயிரிழந்தவர்களின் சடலங்கள் காணப்பட்டன. ஹெலிகொப்டர் மூலமும் இவர்களை மீட்க முடியாது. காரணம். 8 ஆயிரம் மீற்றர் உயரத்தில் காற்றழுத்தம் குறைந்த இடத்தில் ஹெலிகொப்டர் தரையிறங்க மாட்டாது. அத்துடன், எவரெஸ்டில் கால் பதிப்பது உடல், உள வலிமை இரண்டுடனும் சம்பந்தப்பட்ட ஒன்று. இந்த கடுமையான சவால் மிக்க விடயத்தை நான் செய்து முடித்துள்ளேன். எனது மனைவி கஸ்தூரிக்கும் மலை ஏறுவதில் ஆர்வத்தை ஏற்படுத்தி வருகிறேன் - என்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கனம் இன்றிய வாழ்க்கை சிகரத்தைத் தொட உதவுமா?

■ பழனித்துரை தர்மகுமாரன்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி

வரலாறு கற்றுத்தந்த பாடங்களும் அதன் வழித்தோன்றல்களுமே மானிட வாழ்க்கையின் இருப்புக்கும் அடையாளத்துக்கும் வித்திடுகின்றன. அந்த வகையில் எமது மூதாதையர்கள் எமக்குப் பல விடயங்களை விட்டுச் சென்றுள்ளனர். அதனை நாம் தொட்டுச் செல்கிறோமோ என்பது கேள்விக்கு உட்படுத்த வேண்டிய விடயமே.

அந்த வகையில் தமிழரின் வாழ்வியலில் இன்றைய முக்கியமான தேவை சிக்கனம். இங்கு சிக்கனம் என்பது பணச் சிக்கனம், நீர்சிக்கனம், வார்த்தைச் சிக்கனம், மின்சாரச் சிக்கனம், எரிபொருள் சிக்கனம் என பல வகைப்படுத்திக் கொண்டே போகலாம். உலகமே பொருளையும் தேவைகளையும் நோக்கியே நகர்ந்து கொண்டே இருக்கின்றது. 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பதற்கு அமைய இன்றைய தலைமுறையினருக்கு பெற்றோர் சிக்கனம் என்ற பழக்க வழக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் அடைதல் மக்கள் கடமையாகும். இங்கு பொருளை இலகுவாக அடைந்து விட்டால் மற்றைய இரண்டும் தானாகவே வந்துவிடும். எனவே மற்றவர்களுக்கு தீங்கு பயக்காத வகையில் நேர்மையான முறையில் சேர்த்து வைக்கும் பொருள்கள் எமது குடும்பத்தையும் எமது முதுமைப் பருவத்தையும் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சிகரமாகவும் உருவாக்கும்.

சிக்கனம் என்பது வீட்டைக் காக்கும் சேமிப்பாகவும் நாட்டைக்காக்கும் சிக்கனமாகவும் இருக்க வேண்டும். அதற்காக உணவு உண்ணாமல் உடைகளை அணியாது இருப்பது அல்ல. நமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றாமல் பொருள்களை சிக்கனம் பிடிப்பது கஞ்சத்தனம். ஆனால் எமது வருமானத்தில் இருந்து தேவைகளைப் பூர்த்தி செய்து அதிலிருந்து கொஞ்சத்தை சிக்கனப்படுத்தல் வேண்டும்.

'வாழு வாழவிடு' என்பதே சிக்கனத்தின் தாரக மந்திரம் அதாவது எமது மூதாதையர்கள் தாமும் வாழ்ந்து தமது சந்ததியினரையும் வாழ வைத்தனர். அன்று அவர்கள் சேர்த்துவைத்த சொத்துக்களே இன்று பலரும் வாழ்வதற்குக் காரணமாக உள்ளன. எமது முன்னோர்கள் கடன், கடமைப்படல் என்ற சொற்பதங்களை கேட்டாலே கோபப்படுவார்கள். ஒருபோதும் கடன் வாங்குவதை விரும்பமாட்டார்கள்.




ஆனால், இன்றோ கடனட்டை இல்லை என்றால் அது கௌரவக் குறைவான விடயமாகவே மாறிவிட்டது. சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட கடனட்டைகளை வைத்திருக்கின்றனர். இந்த அளவுக்கதிகமான ஆடம்பரம் இன்றைய சந்ததியினரின் சேமிப்பையும் வாழ்க்கை முறையையும் மொத்தமாகச் சிதைத்துவிட்டது.

பொருளாதார வாழ்வைப் பொறுத்த வரையில் இலாபம், நஸ்டம் என்பது சுழற்சி முறையில் வந்து கொண்டே இருக்கும். இங்கு சிக்கனப்படுத்தி சேமிப்பை ஏற்படுத்திக் கொள்பவன் நஸ்டத்தில் இருந்து விடுபட்டு இன்பமாக இருக்கிறான்.











சிக்கனம் இல்லாதவர்கள் நஸ்டம் வரும் போது துன்பப்பட்டு துவண்டு விடுவதுடன் தவறான முடிவெடுத்து உயிரிழக்கவும் முயற்சிக்கின்றனர்.

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு சிக்கனத்தை பின்பற்ற வேண்டும். இராஜராஜ சோழன் தானியங்களை கோயில் கோபுரங்களில் சிக்கனப் படுத்தினான். மன்னன் பராக்கிரமபாகு ஒரு துளி நீரையும் வீணாக்காது சிக்கனப்படுத்துங்கள் என்றான்.

## கல்வியூட்ட வேண்டும்

பாடசாலைகளில் மாணவர்களுக்கு சிக்கனம் பற்றித் தெளிவுபடுத்த வேண்டும். பணத்தை மட்டும் சிக்கனம் செய்யாது, நேரச்சிக்கனம், நீர்ச்சிக்கனம், மின்சாரச்சிக்கனம் போன்றவற்றை மீதப்படுத்துவதற்கான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தி சிக்கனத்தில் சிறந்து விளங்கும் மாணவர்களுக்கு ஊக்கப் பரிசில்கள் வழங்க வேண்டும்.

சிக்கனம் கொண்ட மனிதர்கள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் சமூகத்தில் மதிக்கத்தக்கவர்களாகவும் உதாரண புருஷர்களாகவும் விளங்குவார்கள். மாறாக ஊதாரிகளாகவும் ஆடம்பர மோகம் கொண்டவர்களாகவும் வாழ்ந்தால் கடன்காரர்களாகவும், துன்பம் மிகுந்தவர்களாகவும், நோய் வாய்ப்பட்டவர்களாகவும், சட்டத்தால் தண்டிக்கப்பட்டவர்களாகவும், சமூக நன்மதிப்பை இழந்தவர்களாகவும் விளங்குவார்கள். எமக்கு எமது மூதாதையர்கள் கற்றுத் தந்த பட்டறிவுகளை எமது சந்ததியினருக்கு விதைக்கவேண்டும். இதற்கு குடும்பத்தில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும்.

'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்றனர் ஆன்றோர். இதற்கு சான்று பயக்கும் வகையில் ஓடி ஓடி உழைத்தனர். உழைத்த வருமானத்தில் செலவு செய்தும் மற்றவர்களுக்கு உதவி செய்தும் அதில் இருந்து சிறு தொகையை சிக்கனப்படுத்தியும் வந்தனர்.

இதனால் குடும்பப் பொருளாதாரம் சரிவின்றி சமநிலையாகக் காணப்பட்டது.

இதன்மூலம் நாட்டின் பொருளாதாரம் பாதுகாக்கப்பட்டது.

அதன் விளைவாக அபிவிருத்தி மேலோங்கியது. சிக்கனத்தின் மகிமையை உணர்ந்து அதைக் கைக்கொள்ளும் அற்புதமான பணியில் முழுமூச்சுடன் நாம் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும். அதன் மகத்துவத்தை அடுத்த சந்ததிக்கும் நாம் கடத்தவேண்டும். ■

---

## சண் தவராஜா எழுதிய

# 'காணாமற் போனவர்கள்'

எழுத்தாளர், ஊடகர் சண் தவராஜாவின் 'காணாமற் போனவர்கள்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு மும்பை இலக்கியக் கூடத்தின் ஏற்பாட்டில் பாண்டுப், பிரைட் மேல் நிலைப்பள்ளி, வி.தேவதாசன் கலையரங்கில் கடந்த மாதம் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அயலக தமிழர் நலவாரிய உறுப்பினர் அலிசேக் மீரான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கவிஞர் இறை ச.இராஜேந்திரன், கவிஞர் புதியமாதவி ஆகியோர் நூல் திறனாய்வுரைகளை நிகழ்த்தினர்.

இலெமூரியா அறக்கட்டளை நிறுவுநர் சு.குமணராசன் மும்பை புறநகர் மாநில தி.மு.க. பொருளாளர் கிருஷ்ணன் அவர்களுக்கு முதல் பிரதியை வழங்கினார். இரண்டாவது பிரதியை தி.மு.க.வின் மும்பை பொறுப்பாளர் எழுத்தாளர் கரூர் இரா.பழனிச்சாமியிடமிருந்து அன்னா கிரானா உரிமையாளர் சிவகுமார் இராமச்சந்திரன் பெற்றுக் கொண்டார்.



மூன்றாவது பிரதியை மும்பை இலக்கியக் கூடத்தின் புரவலர் அமலா ஸ்டேன்லியிடமிருந்து மகிழ்ச்சி மகளிர் பேரவையின் வெண்ணிலா சுரேஷ்குமார் பெற்றார்.




தமிழ்த் தாய் வாழ்த்தை குழந்தை கெனிசா பழனி விக்னேசு இசைக்க வரவேற்புரையை மும்பை இலக்கியக் கூடத்தின் ஒருங்கிணைப்பாளர் கவிஞர் வ.ரா. தமிழ்நேசன் வழங்கினார்.

மும்பை இலக்கியக் கூட புரவலர் எழுத்தாளர் சேது ராமன் சாத்தப்பன், இந்திய பேனா நண்பர் பேரவை நிறுவனத் தலைவர் எம்.கருண், மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றத் தலைவர் முனைவர் வதிலை பிரதாபன், மும்பைத் தமிழ்ச் சங்க மேனாள் செயலாளர் மிக்கேல் அந்தோணி, ஜெரிமெரி தமிழ்ச் சங்க ஆலோசகர் ஜெ.பால்துரை ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் அமைத்த ஆலயத்தில் நாளையதினம் கும்பாபிஷேகம்!




திருமதி ஜெ.ஜெகதீஸ்வரன்
ஆசிரியை
யாழ். வண். நாவலர் மகா வித்தியாலயம்

சைவ சமயிகளால் ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரது சைவப் பணியில் உன்னதமானதும், வரலாற்றுச் சிறப்புமிக்கதுமான 1848ஆம் ஆண்டில் யாழ். வண்ணார்பண்ணையில் அவரால் ஆரம்பிக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையில் (யா/வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயம்) அமைக்கப்பட்ட சமயகுரவர் நால்வருக்குமான ஆலயமும் விளங்குகின்றது.

இற்றைக்கு நூற்று எழுபது ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்தது இந்த ஆலயம். கடந்த 24 ஆண்டுகளின் பின் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 11ஆம் திகதி இந்த ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு நாளை வியாழக்கிழமை காலை 7.30 க்கும் 8.30 க்கும் இடையிலான சுபவேளையில் கும்பாபிஷேகம் செய்யப்படவுள்ளது.

இவ் ஆலயமானது அமைக்கப்பட்ட காலத்தில் சமய குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் எனும் நால்வரையும் மூலஸ்தான மூர்த்திகளாகக் கொண்டு அமைந்ததுடன், அர்த்த மண்டபத்தின் இடப் பக்கத்தில் சமயகுரவர் நால்வரையும் ஏனைய நாயன்மாரையும் பெரியபுராணம் வாயிலாக உலகுக்கு வெளிப்படுத்திய சேக்கிழார் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளார். நாவலர் மறைவின் பின் அர்த்த மண்டபத்தின் வலது பக்கத்தில் ஐந்தாம் குரவரான நாவலரை பிரதிஸ்டை செய்துள்ளனர்.



கால மாற்றத்துக்கும், இவ் ஆலயம் பற்றி அறியாதோருக்கும், இளைய தலைமுறையினருக்கும் இவ் ஆலயம் பற்றி வெளிப்படுத்தும் நோக்கிலும் காங்கேசன்துறை வீதியில் (கே.கே.எஸ். வீதி) இவ் ஆலயத்தின் முன்வாயில் அழகுற திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. (ஏற்கனவே இவ்விடத்தில் வாயில் இருந்து பிற்காலத்தில் மூடப்பட்டது). இவ்வாயிலின் வளைவில் நால்வர் வரலாற்றுச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ் ஆலயத்தை பொதுமக்களும் ஏனைய பாடசாலை சைவ மாணவர்களும் வழிபட்டுச் செல்வதற்காகவும் ஒழுங்கமைக்கப்பட்டு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்ம கர்த்தா சபையினரால் இவ் ஆலயம் புதுப்பொலிவுடன் குடமுழுக்கு செய்யப்படவுள்ளது. அனைத்துச் சைவசமயிகளும் இவ் ஆலயக் குடமுழுக்கு நிகழ்வில் கலந்து சிவனருள் பெற்ற சிவனடியார்களான சமயகுரவரின் ஆசியைப் பெறுவோமாக.

*சமயகுரவர் வழிநின்று
சைவத்தைக் காப்போம்*

# திங்களோ? குடையோ?

உலகளாவி விரிந்து நிற்கும் எங்கள் தமிழிலக்கியத்தில், நிறைந்து கிடக்கும் சொத்துக்களின் அளவிற்கு எல்லையில்லை. எந்த ஒரு இலக்கியத்தை எடுத்தாலும் அது எம்மை ஈர்த்துத், தனக்குள் கரைத்துக் கொள்கிறது. அவற்றைப் படிக்கும் போதெல்லாம் வியப்பினால் இதயம் விரிந்து போகிறது. அப்படி எம்மை ஆச்சரியப்பட வைக்கும்; அழகுத் தமிழ் இலக்கியங்களாக பேரிலக்கியங்கள் தான் இருக்கின்றன, என்று தவறாக எண்ணிவிடக் கூடாது. சிற்றிலக்கியங்களும் ஒன்றும் குறைந்தவை அல்ல.

பாடல் எண்ணிக்கை, பெருங்காப்பியங்களுக்குண்டான, அடிப்படை நியதிகள் என சில ஒப்பீடுகளால் அவை சிற்றிலக்கியங்களாக வரையறை செய்யப்பட்டாலும் கூட, கவித்துவத்தால், கதைச்சிறப்பால் பேரிலக்கியங்கள் போல் சிற்றிலக்கியங்களும் சிறப்புற்று நிற்பதை மறுப்பதற்கில்லை. இவ்வாறு சிற்றிலக்கியமாக விளங்கிச் சிறப்புற்று நிக்கும் ஓர் இலக்கியம் தான் "முத்தொள்ளாயிரம்"

முடியுடை மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்கள் ஒவ்வொருவரைப்பற்றியும் தொள்ளாயிரம் பாடல்களால் பாடினின்ற நூல் என்ற வகையில் இப்பெயர் பெற்றதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் தற்போது இந்நூலின் முழுமையான பாடல்களும் கிடைக்கப்பெறவில்லை. மிகச் சொற்பமான பாடல்களே கிடைக்கப்பெற்றுள்ளன. இந்நூலைப் பாடிய புலவர் பெயரும் இன்று அறிதற்கில்லை. முத்தொள்ளாயிரத்தின் அத்தனை பாடல்களும் அற்புதமானவை. ஆகா என்று வியப்பூட்டி நிற்கும் வீரியக் கவிச்சிறப்புடையவை. அவை எடுத்தியம்பும் நம் தமிழ் மன்னர்களின் வீரம், கொடை,காதல்,நட்பு, தேசப்பற்று என இத்தியாதி இத்தியாதி மிக மிக அதிகம். அவற்றைச் சுவைத்தால் இதயம் பேருவகை கொள்கிறது. பெருமிதமும் பூரிப்பும் நெஞ்சை நிறைக்கின்றன.

கவிதையால் வரைந்த காட்சிகள் கற்பனை ஊற்றைப் பிரவகிக்க வைக்கின்றன.

நம்மை மறந்து நாம் வேறோர் உலகில் சஞ்சரிக்கிறோம். இதயம், நிறைகிறது. விரிகிறது. இன்பக் கடலில் துளையமாடுகிறது.

இத்தகைய சுகானுபவத்தைத்தந்து கொண்டிருக்கும் சிறப்பு தமிழின் எல்லா இலக்கியத்துக்கும் உண்டு. வாருங்கள் அவற்றை மாந்தி மகிழ்வோம்.



கம்பநேசன்

**பதச்சோறாய் இந்த முத்தொள்ளாயிரத்தில் ஓர் பாடல்**

சேர அரசர்களில் பெயர் பெற்ற ஓர் பேரரசன் செங்கண் மாக்கோதை. எப்போதும் போர்க்குணம் மாறாதவன். கோபமிகுதியால் சிவந்த கண்களை உடையவன். பகையரசன் ஒருவனோடு போர் செய்கிறான். அவனது வலிமை மிக்க யானைப்படைகள் போர்க்; களத்தை உண்டு இல்லை என்று பண்ணியபடி வலம்வருகின்றன. அவ்வாறு வருகின்ற யானையில் ஒன்று தன் வீர விளையாட்டை வெகு சாகசமாக ஆற்றிக் கொண்டு அங்கும் இங்கும் திரிகிறது. பகையரசர்களது தேரின் மேல் விளங்குகிற விரிந்த பூ மாலை சூடப்பெற்ற வெண் கொற்றக் குடைகளையெல்லாம் தன் துதிக்கையால் சிதைத்து எறிகிறது. அவற்றைத் தன் காலின் கீழ்ப் போட்டு மிதிக்கிறது. இதைத் தன் வேலையாகவும் விளையாட்டாகவும் அன்று முழுவதும் ஓய்வின்றிச் செய்துவருகிறது.

மாலை மயங்கி இரவாகும் தருணம். வானில் பூரணத் திங்கள் திசையொளி பரப்பிக் கொண்டு வருகிறது. உயரத் தோன்றல் வட்டவடிவாய் காட்சி தரல், வெண்மையாய் ஒளிவீசல் என்பவற்றால் வெண்ணிலவின் தோற்றமும் வெண்கொற்றக் குடையின் தோற்றமும் ஒத்து விளங்குகிறது. பகையரசர்களின் வெண்கொற்றக் குடைகளை சிதைத்த தன் பழக்கத்தில் இருந்து மீளாத அந்தச் சினம் மிகுந்த யானை தான் சிதைக்கத்தவறிய ஓர் வெண் கொற்றக்குடை இன்னமும் ஒன்று மிச்சமாய் இருக்கிறது அதையும் விட்டுவைக்காது சிதைத்துவிட வேண்டும் என்று எண்ணி வீறுகொண்டு திங்களின் மேல் தன் கையை நீட்டியபடி செல்கிறது. எப்படி இருக்கிறது அந்தப் பெயர் தெரியாத புலவனின் வம்புத்தனமான கற்பனை.

இதோ பாடல் பிறக்கிறது…

**வீறுசால் மன்னர் விரிதாம வெண்குடையை
பாற எறிந்த பரிசயத்தால் தேறாது
செங்கண் மாக்கோதை சினவெங்களியானை
திங்கள்மேல் நீட்டும் தன்கை**

சேர அரசனின் யானைப்படையை அதன் வீரசாகசத்தை போற்றிப்பாட வேண்டும். அப்படி அடித்தது. இப்படி அடித்தது. தூக்கியெறிந்தது. மலையைக் குடைந்தது. என்று குண்டுச் சட்டிக்குள் சவாரி செய்யாமல் ஒரு புதியதோர் பாதையில் கனைத்துப் பறக்கிறது அந்தப் புலவனின் கற்பனைக்குதிரை. அந்தக் குதிரையில் ஏறி நாமும் சவாரி செய்வோம் வாரீர்!

## "லண்டனில் இருந்து விமல்"



லண்டனில் இருந்து விமல் எனும் நூல் அறிமுகவிழா யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நூலை வெளியிட்டு வைத்தார்.

நூல் அறிமுகவுரையை ஈழத்தின் மூத்த எழுத்தாளர் கவிஞர் சோ.பத்மநாதனும், நூல் பற்றிய கருத்துரைகளை எழுத்தாளர் திருமதி. கோகிலா மகேந்திரன், யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஸ் கண்ணன் மற்றும் யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசன் ஆகியோரும் ஆற்றினர்.

நிகழ்வில் உலக அறிவிப்பாளர் வி.எச்.அப்துல் ஹமீட்டும் கலந்துகொண்டார். (66 - 125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கிடுகுவேலியும் மூக்குப் பேணியும்

யசோதா பத்மநாதன்

ஒருவரை அல்லது ஒரு நிகழ்ச்சியை ஞாபகப்படுத்த ஏதேனும் ஒரு பாடல் வரி அல்லது ஓர் இசைக்குறிப்பு அன்றேல் ஏதேனும் ஒரு சிறிய பொருள் அல்லது நடைபெறும் ஒரு சிறு சம்பவம் போதுமானதாக இருக்கும். பழைய நினைவுகளையும் வாழ்க்கையையும் அது மீட்டுத் தந்து விட்டுப் போயிருக்கும்.

இதுபோலத்தான் இந்தக் கிடுகுவேலியும் மூக்குப் பேணியும் யாழ்ப்பாண மக்களின் கட்டுப்பாடான மற்றும் கட்டுப் பெட்டிக் கலாசாரத்தை குறிப்பாகச் சுட்டிக் காட்டுவதற்கு 'கிடுகுவேலிப் பாரம்பரியம்' என்ற சொல்லைக் குறியீடாகப் பயன்படுத்தும் அளவுக்கு கிடுகுவேலிகள் அங்கு தனித்துவமாக விளங்குவதையும் குறியீடாகக் கையாளப்படுவதையும் வரலாற்றுப் பரப்பில் தெளிவாகக் காணலாம்.

மூக்குப் பேணியும். அதன் தனித்துவமான வடிவமும் அண்ணாந்து குடிப்பதற்கேற்ற வகையில் இருக்கும் அதன் நளினமும் அன்றாடப் பயன்பாட்டில் யாழ்ப்பாணத்தார் மூக்குப் பேணியைப் பயன்படுத்திய பாங்கும்.

# ஆத்திரத்தைக் குறைக்க 'கோப அறை' தேவை!

கே. எஸ். சிவஞானராஜா



நாடெங்கிலும் மக்கள் பொருளாதார நெருக்கடியினாலும் உழைப்பின்மையாலும் வறுமைக்குள் தள்ளப்பட்டதாலும் ஓரங்கட்டப்பட்டதாலும் உண்ண - உறங்க - உடுக்க - உயர - வழி - தெரியாததனாலும் வாழ்க்கையை முன்னெடுக்கமுடியாமல் திணறி வருகின்றனர். சுமார் 30 இலட்சம் மக்கள் வறுமையின் எல்லையைக் கடந்து மூன்று வேளைக்கான உணவுக்காகத் தவிக்கின்றனர். பொதுச் சொத்தில் வாழ்பவர்களுக்கு வறுமையின் நிறம் என்னவென்று தெரியாமல் குளிரூட்டிகளோடும் - வாகன அணிகளோடும் - மேடைகளோடும் - பேட்டிகளோடும் - போட்டிகளோடும் புத்தகங்களை அதியுச்ச செலவில் பிரசுரித்து புளகாங்கிதம் அடைவதோடும் அறிக்கைகளில் தலைவனாவதோடும் ஊடகங்களை அரவணைப்பதோடும் அடுத்த சந்ததிக்கு ஒப்படைக்காமல் சாகும் வரைக்கும் தானே தளபதி என்ற தோரணையில் தலைவரும் நானே, செயலாளரும் நானே, பொருளாளரும் நானே, பத்திராதிபரும் நானே, படத்துக்கும் நானே, எல்லாமே நான் தான் ஆனால், வீதிக்கும் வெயிலுக்கும் போராட்டத்துக்கும் அங்கு போராடவோ நான் வரமாட்டன். அதற்கு நீங்கள் தான். நன்மைக்கும் பதவிக்கும் நான். மற்ற அனைத்துக்கும் நீங்களே தான். இவர்களுக்கு என்னதான் வைத்தியம் செய்ய முடியும். இவர்கள் போல நாட்டில் ஏராளமானவர்கள் தம்மையே புகழ்ந்து இச்சை பேசுபவர்கள் பொய்மையாளர்களாக உள்ளார்கள். இவர்கள் ஒரு நரகம். இவர்களையும் கோப அறையில் கவனிக்கலாம் கவனிக்கவேணும். அவரை எண்ணி அடித்து நொருக்க முடியும்.

இன்னும் சொல்வதானால், இலங்கையில் நால்வருக்கு ஒருவர் வலு சோம்பேறிகளாக வாழ நாமே நம்மைத் தயார் பண்ணி வைத்திருக்கின்றோம். சும்மா இருந்து சொகுசாக வாழ்ந்து சுவையாகச் சாப்பிடவும் அடுத்தவரை வாயிலே போட்டு நன்னவும், தன் முதுகில் எழுதப்பட்ட முத்திரையை மூடி மறைக்கவும், யார் யாரைப் போட்டுத் தள்ளி முன்னுக்கு வந்து கதிரையைப் பறிக்கவும், எப்படி எப்படி குறுக்கு வழிகளில் பணத்தைக் கைப்பற்றவும், கருநாகமாக அழகாகத் தோன்றவும், கொள்ளையடிப்போன் வள்ளலைப் போலவும், கோயிலை இடிப்போன் சாமியைப் போலவும் வாழ்கின்ற சமூகப் போலிகளை அக்குவேறு அணிவேறாக கவனிப்பதற்கும், மன உளைச்சலிலிருந்து விடுதலை பெறுவதற்கும், கோப அறைகள் நிம்மதியைத் தரும்.

எப்படியென்றால் சம்பந்தப்பட்ட ஆசாமிகளை பெயரிடப்படாமலேயே உடைநடை பாவனைகளாக்கி அடேயப்பா அந்தப் பொம்மைகளை அடி அடியென்று அடித்து நொருக்கி கிழித்து கோப அறையை களைகட்டச் செய்ய முடியும். இந்த நிலையில் சம்பந்தப்பட்டவர்களுக்கு விடுதலை கிடைக்கும்.




தேவையேற்பட்டால், ஒரு பதிவேட்டுப் புத்தகத்தையும் பராமரிக்க முடியும். இங்கே ஆன்மீகத்துக்குப் பிறிதாகவும் அரசியலுக்குப் பிறிதாகவும் தனித்தனிப் புத்தகங்களையும் தனித்தனிக் கோப அறைகளையும் துப்புரவு செய்வதற்கு ஒரு பொறுப்பாளரை அவருக்கான கட்டணத்தையும் வசூலிக்கவும் ஏற்பாடு செய்யலாம். இந்த அறைகளுக்குப் பலத்த வரவேற்பு ஏற்படும். இங்கு கொடுக்கின்ற ஒவ்வொரு அடிக்கும் ரென்சனும் குறையும், பிறெஷரும் குறையும். ஒவ்வொரு அடி விழும்போதும், நொருங்கியுடைந்து தூள்தூளாகும் போது கோபத்தின் காத்திரம் குறையும், கனதியும் நீங்கும்.

மன அழுத்தத்தையும் நெருக்கீடுகளையும் முறியடித்து புதியதொரு மனிதராக வெளியேறுபவராக கோப அறைகள் அமைக்கப்படுகின்ற நிலையில் அங்கிருந்து வெளியேறும்போது ஆரோக்கியமான அமைதியான அழகான சாந்த அறைகள் சம்பந்தப்பட்டவர்களை குளிர்விக்கும் அதிலே இசைக்கருவிகளின் சௌக்கால வாத்திய இசை வண்ண வண்ணப் பூக்கள், குழந்தை ஓவியங்கள், நீர்வீழ்ச்சி, பத்திமார்க்கப் பரவச நிகழ்வு இவ்வாறு பல சாத்வீக நிகழ்வுகளுக்கு முக்கியமான இடம்பெற முடியும்.

கோப அறைக்குள் மட்பாண்டப் பொருள்கள், ரயர் ரியூப், பிளாஸ்ரிக் பொருள்கள், சோத்தி மரங்கள், ஐஸ் கட்டிகள், றபர்சீற், வைக்கோல் பதுமைகள், காய்கனிகள், வாழைக்குற்றிகள், சிதறடிக்கும் தேங்காய்கள், நீள்சதுரத் தண்ணீர்த்தொட்டிகள், தயிர் முட்டிகள், களிமண் சிலைகள், பங்கமுற்ற அலுமினிய மண்பாத்திரங்கள், தும்பு பஞ்சு தலையணைகள், பழுதடைந்த சர்க்கரை நீற்றுப்பூசணிகள் ஆகிய பரவலாக அவரவர் விருப்பம் அறிந்து வைக்கப்பட வேண்டும்.

இந்தக் கோப அறைக்குள், சகல தரப்பினரும் வரவேண்டிய தேவை ஏற்படும். ஆம் அது ஏற்பட்டே விட்டது. பின்வரும் பான்மையினர் பாதகமான ஆசிரியர் மாணவ விரிசல், தீங்குதலும் மோசமான ஆன்மீக அரசியல் விரிசல், பாகுபாடான சமய சமூக ஏற்றத்தாழ்வு, அறிவுசார்ந்த எங்கும் எதிலும் பாலியல் பறிப்பு, கௌரவமான உயர்தரவர்க்க பாலியல் துஷ்பிரயோகம், இளைய தரப் பஞ்சமா பாதக வெளிப்பாடு, ஊக்குவிப்பான விபசார வாழ்வு, எங்கும் எதிலும் விரவியுள்ள போதை இலஞ்சம் ஊழல், குறுக்கு வழியில் - பதவிக் கதிரை பந்தம் பாரபட்சம், வினைத்திறனற்ற அரச அலுவலர்கள் இத்தகையோருக்கு சம்பவத்திரட்டுக் குறிப்போடு கோப அறைகளிலே சம்பந்தப்பட்டவர்களை போட்டு வாட்டி வதைத்து புரட்டி வெளுத்து வாங்கி அடித்து உடைக்கும்போது, அவர்களின் ஆத்திரம் நீங்கும். இதனால் கொடி கட்டிப் பறப்பவர்கள் நெருக்கு வாங்கலாம்? கோப அறையில்.

## விதைக்குத் தெரியாத விருட்சம்

பெரிதாக
அடர்ந்து வளர்ந்த
மரம் அது...!
அதன் உயரம் கண்டு
அதிர்ந்து போனது
கீழே நின்ற மரம்!
அதன் நிழலிலும்
குளிர் காய்ந்தது...!
தான் வீழாமலிருக்க
அதன் மீது
சாய்ந்தும் கொண்டது!
புயல் மழைக்கெல்லாம்
சாயாது நின்று
சரித்திரமும் படைத்தது
உயர்ந்த மரம்..!
சாய்ந்து நின்ற மரமும்
தன்னையும் காத்ததால்
தலை அசைத்து
நன்றியும் சொன்னது...!
உயர்ந்த மரமும்
அதைவிடப்
பெரிதாக.. பெரிதாக...
தலை அசைத்ததே...!




## புதன்பொய்கைக்கு எழுதுங்கள்

புதன்பொய்கையில் உங்கள் ஆக்கங்கள் (இலக்கியம், கலை மற்றும் கலாசாரம்), இலக்கியப் படைப்புக்கள் விர்சனங்கள், கவிதைகளை பிரசுரிக்க ஒரு வாய்ப்பு. உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் கலை, கலாசார நிகழ்வுகள், நூல்வெளியீடுகள், ஆற்றுகைகள் தொடர்பான பதிவுகளையும் புகைப்படங்களுடன் அனுப்புங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

புதன்பொய்கை, உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் முகவரி :
puthanpoigai@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேர்தலை நிறுத்துவது தொடர்பில் ரணில் முடிவு எடுக்கமுடியாது

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 7**

**தேர்தலை நடத்தாமலிருப்பதற்கு ஜனாதிபதியால் தனித்து எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கமுடியாது. தேர்தல் நடத்தப்பட வேண்டுமா? இல்லையா? என்பதை அறிவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தேர்தலை நடத்த முடியாது என்பதை ஜனாதிபதியால் தீர்மானிக்கமுடியாது. மக்கள் தேர்தலை விரும்புகின்றனரா இல்லையா? என்பதை அறிய வேண்டுமாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும். ஜனாதிபதியின் விருப்பத்துக்கு ஏற்ப தேர்தலை நடத்தாமலிருப்பதற்கு இடமளிக்க முடியாது. தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் நடைபெறுகின்றன. அதனால் இது தொடர்பில் தற்போது ஜனாதிபதி கருத்துக்களை வெளியிட்டுள்ளமை பொருத்தமற்றது. ஜனாதிபதித் தேர்தலை ஒரு வருடத்துக்கு முன்னரே நடத்துவதற்காக சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நாம் முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் என்பதை ஏற்கனவே தெரிவித்துள்ளோம். ஜனாதிபதி அதற்கான நடவடிக்கைகளையேனும் எடுக்க வேண்டும். எதற்காகத் தேர்தலை நடத்தாமலிருப்பதற்கு ஜனாதிபதி முயற்சிக்கின்றார்?

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையறையின்றிக் காலம் தாழ்த்தப்பட்டுள்ள நிலையில், அதன் உறுப்பினர்களுக்கு மீண்டும் அதிகாரத்தையும், சிறப்புரிமைகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. ஆயினும் தேர்தல் ஆணைக்குழு அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. திட்டமிட்டுத் தேர்தலைக் காலம் தாழ்த்தி, அரசியல் நியமனங்களை வழங்க முற்படுவதை அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டும் - என்றார். (எ-இ)

## இளம் தம்பதியர் வெட்டிக்கொலை!

### குருநாகலில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 7

இளம் தம்பதி ஒன்று வெட்டுக்காயங்களுடன் அவர்கள் வசித்த வீட்டின் அறையொன்றிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.


குருநாகல் - நாரம்மலை பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் வாடகை வீடொன்றில் அவர்கள் வசித்துவந்த நிலையில் வெட்டுக்காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

29 மற்றும் 27 வயதுடைய தம்பதியரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

வன்முறைக் குழுவொன்றால் இருவரும் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையாளிகளைக் கைது செய்வதற்கு மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-22)



## கம்பளையில் நிலநடுக்கம்!

கொழும்பு, ஜூன் 7

கம்பளையில் சிறியளவிலான நிலநடுக்கம் ஒன்று பதிவாகியுள்ளது என்று புவிசரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்தது. நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது என்றும், பூமியின் மேற்பரப்பில் இருந்து 10 கிலோமீற்றர் ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

2 ரிக்டர் அளவில் பதிவாகியுள்ள இந்த நில நடுக்கத்தால் பாதிப்புக்கள் எவையும் இல்லை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## சா/த மாணவன் சடலமாக மீட்பு

கொழும்பு, ஜூன் 7

நடைபெற்று வரும் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவன் ஒருவர் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சிலாபத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அன்ரனி சில்வெஸ்டர் (வயது- 17) என்ற மாணவனே கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு படித்துக் கொண்டிருந்த மாணவனைக் காணவில்லையென உறவினர்கள் தேடியபோது வீட்டின் கிணற்றுக்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

இறப்புத் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-22)

## எழுதுமட்டுவாழில் டெங்கு ஒழிப்பு

கொடிகாமம், ஜூன் 7

எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கமைய இன்று புதன்கிழமை எழுதுமட்டுவாழ் வடக்கிலும், நாளைமறுதினம் கெற்பேலியிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

டெங்கு பரவுவதற்கு ஏதுவான நிலைமைகளைக் கொண்டுள்ள காணி உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. (எ-ரி-159)



## வடக்கு ஆளுநரைச் சந்தித்த இந்தியத் துணைத் தூதுவர்!

யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் வடமாகாணத்தின் ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸை சந்தித்துக் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாண வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடந்த வாரம் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது என்று இந்தியத் துணைத் தூதரகத்தின் ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளது.

வடக்கில் இந்திய அபிவிருத்தித் திட்டங்களின் நிலை மற்றும் பல்வேறு துறைகளில் இந்தியாவுக்கும், இலங்கையின் வடக்கு மாகாணத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிகள் தொடர்பாகக் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பின் போது வடமாகாண ஆளுநருக்கு இந்தியத் துணைத் தூதர் இந்திய நூல்கள் சிலவற்றையும் அன்பளிப்புச் செய்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி-20)

## மன்னார்த் தீடைகளில் மீன்பிடிக்க அனுமதிக்குக

### ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்து

மன்னார், ஜூன் 7

தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே காணப்படும் தீடைகள் என அழைக்கப்படும் மணல் திட்டிகளில் மீனவர்கள் மீன்பிடிப்பதற்குத் தற்போதுள்ள தடையை நீக்கி மீன்பிடியில் ஈடுபட அனுமதிப்பது தொடர்பாக மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

தலைமன்னாருக்கும், தனுஷ்கோடிக்கும் இடையே பாக்கு நீரிணைக் கடற்பரப்புக்குள் அமைந்துள்ள இலங்கைக்கு சொந்தமான மணல் திட்டிகளில் காலம் காலமாக மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வந்தனர். கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் அங்கு மீன்பிடிக்கு தடைவிதிக்கப்பட்டது.

அங்கு மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று மீனவர்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்துவரும் நிலையில், இது தொடர்பில் மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது.

அங்கு கருத்துத் தெரிவித்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், அந்தப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடமுடியாது என வர்த்தமானியில் உள்ளது. பறவைகள் இந்த மணல் திட்டிகளில் தங்கியிருந்து முட்டைகள் இடுவதால் இவைகள் பறவைகள் சரணாலயமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

பறவைகளை விடவும் மீனவர்களின் உயிர்வாழ்வுக்கான வாழ்வாதாரத்தில் அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் எனக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான், பறவைகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே இந்தப் பகுதியில் முட்டை இடுகின்றன.

இந்தக் காலத்தை விடுத்து ஏனைய காலத்தில் மீனவர்கள் முன்புபோன்று மீன்பிடிக்க அனுமதிக்கலாம்.

அதேபோன்று மூன்றாம், நான்காம், ஐந்தாம் தீடைகளில் மீனவர்களுக்கு அனுமதி வழங்கி ஏனைய தீடைகளை பறவைகள் முட்டைகளை இடுவதற்கு ஒதுக்கலாம். மன்னார் பிரதேச செயலாளர் இது தொடர்பில் வன உயிரிகள் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடி அனுமதியைப் பெற்றுக்கொடுக்க வழிவகுக்கவும் என்று தெரிவித்தார். (ச-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 07 . 1950



மறைவு
06 . 06 . 2023

## திருமதி இராசலட்சுமி புவனேந்திரன் (Baba)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராசலட்சுமி புவனேந்திரன் நேற்று (06.06.2023) மதியம் 12.30 மணியளவில் இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் இராமநாதன் கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற புவனேந்திரன் (புவி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாக்கியம், காலஞ்சென்ற கண்மணி மற்றும் கமலாம்பிகை, அருளானந்தன், தணிகாசலம், காலஞ்சென்ற குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சறோஜா விக்னேஸ்வரன், சர்வேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அருளானந்தன் (சகோதரன்)
T.P.: + 44 079 842 49075 (UK)
076 373 9285

"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக"

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
12 . 06 . 1950



ஆண்டவர் அடியில்
05 . 06 . 2023

## திருமதி லோகேஸ்வரி - பரராஜசிங்கம் (யோகம்)

வீமன்காமம் - தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் காமாட்சியம்மன் கோவிலடி, நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி பரராஜசிங்கம் அவர்கள் நேற்று முன்தினம் (05.06.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தர்மலிங்கம் - இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், கலாபூஷணம் பரராஜசிங்கம் (சமாதான நீதிவான், ஸ்ரீஅம்பாள் ரேட்ஸ், சுன்னாகம், அம்பாள் ஹாட்வெயர்ஸ், நீர்வேலி, முன்னாள் உரிமையார்) அவர்களின் பிரிய பத்தினியும், தர்மகுமாரன் (போதனாசிரியர், தொழில்நுட்பக் கல்லூரி, மன்னார்), தர்மசங்கரன் (யாழ்ப்பாணம் மாநகரசபை), தர்மரூபன் (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீபிரியா (நல்லூர் பிரதேச சபை), வாலாம்பிகை (IT Park), சாருஜா (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், நேருக்சன், சிஜிசன், வைஷ்சகி, கேசிகன், பராபரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செல்வரட்ணம், கமலேஸ்வரி (அமரர்) மற்றும் முத்துலிங்கம், மகேஸ்வரி (கனடா), அமரர் கமலாதேவி, அமரர் பத்மநாதன், உருக்குமணி, செல்வராணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி வடக்கு, சிவியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி வடக்கு.
021 205 4822, 0777 060 502.

தகவல்:
குடும்பத்தினர்.

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் வீதி ஆலடிச் சந்தி, பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் 1 3/4 பரப்புக் காணியில் இரண்டு அறைகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. (CS 505726)

076 072 4041

## தேவை

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள சட்ட நிறுவனத்திற்கு பெண் உதவியாளர்கள் இருவர் தேவை. ஒருவர் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையும், மற்றையவர் மாலை 5 மணி முதல் மாலை 7.30 வரையும் பணிபுரிய கூடியவர்.

தொடர்பு: 077 356 3857

## The Tender Opening date Postponed

The Advertisement for Purchasing of Generators **Published on 24.05.2023,** by Regional Director of Health Services, Jaffna. The above Tender Opening Date is **postponed to 26.06.2023 at 10.30 am** at Regional Director of Health Services Jaffna.

**Chairperson**
**Regional Procurement Committee**
**Regional Director of Health Services, Jaffna.**

CR/39979/AH-1

# கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்திசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**திரு. பாலசுப்பிரமணியம்-முகுந்தன்**
அவர்களின் அன்புத் தந்தை
**கணபதிப்பிள்ளை-பாலசுப்பிரமணியம்**
அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிச் சங்கம்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 04 . 1957



மறைவு
04 . 06 . 2023

## திருமதி விஜயலட்சுமி சண்முகநாதன்

இணுவில் கிழக்கு, இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி சண்முகநாதன் கடந்த (04.06.2023) ஞாயிற்றுக்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் மற்றும் தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் பூரணம் தம்பதியரின் மருமகளும், சண்முகநாதன் அவர்களின் மனைவியும், கார்த்திகாவின் அன்புத் தாயாரும், நாதரூபனின் அன்பு மாமியாரும், ஹரிஷின் அன்புப் பேர்த்தியும், நடேசலிங்கம், இராசலட்சுமி, இராசலிங்கம், ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயலட்சுமி, சச்சிதானந்தம், பத்மரஜனி, ஸ்ரீதர், காலஞ்சென்ற உருத்திரமூர்த்தி மற்றும் சிவமணி பாலச்சந்திரன், கருணாமூர்த்தி, சிவகுமார் மற்றும் ஜெயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2023) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 50720) (N-1)

# இலவச கண்புரை அறுவைச் சிகிச்சை

யாழ்., ஜூன் 7
யாழ். மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு, யாழ். போதனா மருத்துவ மனையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தென்மராட்சிப்பகுதிக்கான நோயாளர்களைத் தெரிவுசெய்யும் இறுதிக் கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் நடைபெறவுள்ளது.

எனவே இதுவரை பதிவு செய்ய தவறிய கண்புரை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண்பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

(ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
19.11.1937

## திரு.குமாரவேலு விஷயரத்தினம்

(Ratnam Pharmacy & Groceries, Ratnam Filling Station)

மறைவு
06.06.2023



காரைநகர் வாரிவளவை பிறப்பிடமாகவும் 144/1, இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட குமாரவேலு விஷயரட்ணம் அவர்கள் நேற்று (06.06.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும், ஜெயலட்சுமி (கொழும்பு), சிவசுதன் (Ratnam Pharmacy, Ratnam Filling), மகாலட்சுமி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணேசன் (பொறியியலாளர்), சிவறூபி, செந்தில்நாதன் (ஆசிரியர்-கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்சனா (MLT-கொழும்பு), Dr.சங்கர் (யாழ். போதனா வைத்தியசாலை), கோசலன் (பொறியியலாளர் -கொழும்பு), ஜனனி (வேம்படி மகளீர் கல்லூரி), தனுஷ் (யாழ். இந்துக் கல்லூரி), அனுஷ் (புனித யோன் பொஸ்கோ), சஜீவன் (Royal College - Colombo), யதர்சினி (சைவ மங்கையர் கழகம்) ஆகியோரின் அன்பு பேரனும், காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், தர்மலிங்கம், அன்னலட்சுமி, தையல்முத்து, வீரச்செல்வி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், செல்லய்யா மற்றும் குணரட்ணம், கமலாதேவி, சந்தானலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.06.2023) வியாழக் கிழமை காலை 7.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.144/1, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

077 3069 506, 021 222 7326

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25166)A-1


# மரண அறிவித்தல்

பிறப்பு
20.11.1953

## இராமலிங்கம் இராஜேந்திரன் (சம்பந்தன்)

(உரிமையாளர்-Leading crusher works KRR Engg(Pvt)Ltd, Nelu water (Pvt)Ltd)

இறப்பு
06.06.2023



வேலணை 1ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராஜேந்திரன் 06.06.2023 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - பாக்கியலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற நாகராசா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமலரின் அன்புக் கணவரும், லிதுர்ஷனின் பாசமிகு தந்தையும், ஹிந்துஜா லிதுர்சனின் மாமனாரும், காலஞ்சென்ற மகேந்திரன், காலஞ்சென்ற மணிவாசகம், கலைமகள், ஸ்ரீதேவி, காலஞ்சென்ற இராஜசுலோசனா, இந்திரலதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இந்திராணி, பத்மாதேவி, சிவராஜா, காலஞ்சென்ற கோபாலபிள்ளை, கந்தையா, ரவி, இராசரத்தினம், இராஜலிங்கம், இராசேந்திரம், இராஜசிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், துஷ்யந்தி, துஷ்யந்தன், கிருஷ்யந்தன், பிரியந்தன், அரவிந்தி, ஆனந்தி, பிரியந்தி, தயானி, கிரிஷானி, துவாரகன், சதுர்ஷன், தர்சினி, வித்தியாயினி, சுகிர்தா, பிருந்தாபன், பிரசன்னா, பிரியதர்சன், பிரசாந்தி, கிருஷாந்தி, நர்மிலா, நர்வீன், மதுராந்தகன், மதுசாரங்கன், கஜானன், கஜநீதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவீந்திரா, சுஜீ, லோஜி, கவிதா, மணிவண்ணன், இராமகிருஸ்ணன், சாய்கீதா, வாகீசன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.06.2023 அன்று மதியம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.19B, 5ஆம் ஒழுங்கை, கதிரேசு வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா.

Tel:077 372 7316

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் கடும் மழையால் பல இடங்களில் வெள்ளம்

**கொழும்பு, ஜூன் 7**

**தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழையைத் தொடர்ந்து களுத்துறை மாவட்டத்தின் புளத்சிங்கள மற்றும் வலல்லாவிட்ட பிரதேச செயலகப் பிரிவுகளின் பல வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.**

புளத்சிங்கள கல்வி வலயத்துக்கு உட்பட்ட கூடலிகம மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையம் மழை நீரில் மூழ்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சார்த்திகளின் நலன் கருதி விசேட போக்குவரத்து வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் மக்களுக்கு உதவுவதற்காக இலங்கைக் கடற்படையினர் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை பரீட்சை நிலையங்களுக்கு கொண்டு செல்வதற்கு படகுச் சேவைகளும் நடத்தப்படுகின்றன.

ஏதேனும் அவசர நிலை ஏற்பட்டால் பொதுமக்கள் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் துரித சேவை இலக்கமான 117 க்கு தொடர்புகொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, களுத்துறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பெய்த கடும் மழையால் அங்குள்ள வீதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு பரீட்சைக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்ட கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவிருந்த மாணவர்களை கடற்படையினர் படகுகள் மூலம் ஏற்றிச்சென்று பரீட்சைக்கு தோற்ற உதவினர்.

களுத்துறை மாவட்டம், பதுரலியலத்பந்துர பகுதியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை காலை ஏற்பட்ட திடீர் வெள்ளம் காரணமாக பெரும் சிரமத்தை எதிர்கொண்ட கல்விப் பொதுத்தராதர சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கு கடற்படை, நிவாரணக் குழுக்கள் உதவின. (எ-இ)

## ஆஸி. அஜஹ்னா தேரரிடம் மன்னிப்புக் கோரிய இலங்கை

கொழும்பு, ஜூன் 7

கட்டுநாயக்க விமான நிலையத்தில் ஏற்பட்ட தாமத நிலை குறித்து ஆஸ்திரேலிய தேரரான வணக்கத்துக்குரிய அஜஹ்னா பிரம்மவஞ்சோ (Ajahn Brahmawanso) விடம் இலங்கை அரசு மன்னிப்புக் கோரியுள்ளது.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றிய துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, "எமது விமான நிலையத்தில் இடம்பெற்ற அந்தச் சம்பவத்துக்காக தேரரிடம் மன்னிப்புக் கோருகின்றோம்" என்று குறிப்பிட்டார்.

வணக்கத்துக்குரிய அஜஹ்னா பிரம்மவஞ்சோ தேரர் சிங்கப்பூர் எயார்லைன்ஸ் ஊடாக பாங்கொக் செல்வதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை இரவு 10 மணிக்கு அடைந்து அங்கு முக்கியமான பிரமுகர் செல்லும் பகுதியில் காத்திருந்துள்ளார். எனினும், அவர் விமானத்தை தவறவிட்டுவிட்டார். இதனால் 10 மணிநேர தாமதத்துக்குப் பின்னரே அவர் புறப்பட முடிந்தது.

பிரதமர் உள்ளிட்ட பிரபுக்கள். சிலர் வெளிநாடு செல்வதால் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்ததாலேயே இந்நிலை ஏற்பட்டது என குற்றஞ்சாட்டப்பட்டது.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் எதிரணி நேற்று செவ்வாய்க்கிழமை கேள்வி எழுப்பியது.

இதற்குப் பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், "பிரபுக்கள் பாதுகாப்பால் தாமதம் ஏற்படவில்லை. வி.ஐ.பி. முனையத்துக்கு ஆயுதம் சகிதம் அதிரடிப்படையினர் செல்ல முடியாது. அவர்கள் வெளியில்தான் இருந்துள்ளனர். தேரர் முன்கூட்டியே அங்கு வந்துள்ளார். அதிகாரிகளின் தவறால்தான் அப்படி நடந்துள்ளது" - என்றார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா, "எமது விமான நிலையத்தில் நடந்த சம்பவத்தால் தேரரிடம் மன்னிப்புக் கோருகின்றோம். இந்தச் சம்பவம் தொடர்பில் விமான சேவைகள் அதிகாரசபையால் விசாரணை நடத்தப்படுகின்றது. பிரதமர் வேறு ஒரு முனையம் ஊடாகவே சென்றார். அவர் அந்தப் பக்கம் வரவில்லை."- என்றார். (எ-44)

## அடுத்த ஜனாதிபதியும் ரணில் விக்கிரமசிங்கவே

### பெரமுன கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 7

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க களமிறக்கப்பட்டு அவர் வெற்றிபெறவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நிதி இராஜாங்க அமைச்சருமான செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மேலும் ஒரு தவணை கட்டாயம் வழங்கப்படவேண்டும். அடுத்த தேர்தலில் அவர்தான் வேட்பாளராக களமிறங்க வேண்டும் என்பதுடன் வெற்றியும் பெறவேண்டும். பொருளாதார மறுசீரமைப்பை ஏற்படுத்தி நாட்டை மீட்கக்கூடிய ஆளுமையும் ஆற்றலும் ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் இருக்கின்றது. ஜனாதிபதியால் தான் மொட்டுக் கட்சியாலும் தற்போது அரசியல் செய்ய முடிகின்றது - என்றார். (எ-44)

## கப்பல் அனர்த்தத்தை ஆராய்வதற்குக் குழு

கொழும்பு, ஜூன் 7

நிவ் டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தங்கள் தொடர்பில் ஆராய்ந்து தேவையான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையில் இந்தத் தெரிவுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதவிர, ஆளும் மற்றும் எதிர்க்கட்சியைச் சார்ந்த 14 உறுப்பினர்கள் இந்த தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (எ-இ)

# காரைநகர் மீன் சந்தையில் வியாபாரம் செய்ய இணக்கம்

காரைநகர் புதிய மீன் சந்தையில் இருந்த குறைபாடுகள் காரைநகர் பிரதேசசபையால் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. புதிய சந்தையில் தற்போது குறைபாடுகள் இல்லை. வியாபாரிகள் சுமுகமான முறையில் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சுட்டிக்காட்டியதை அடுத்து, புதிய சந்தையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள வியாபாரிகள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

காரைநகர் புதிய மீன்சந்தை தொடர்பாக சர்ச்சை நீடித்த நிலையில், அதுதொடர்பில் கலந்துரையாடுவதற்காக நேற்று முன்தினம் திங்கட்கிழமை கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. காரைநகர் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வியாபாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட வியாபாரிகள், மக்களிடமோ அல்லது வியாபாரிகளிடமோ கலந்துரையாடாது காரைநகர் பிரதேசசபை முன்னாள் தவிசாளர் தன்னிச்சையாக சந்தை அமைத்துள்ளார். அதன்பின்னர் எம்மை வற்புறுத்தி அங்கு அனுப்ப முற்பட்டார். வீடுகளுக்குத் தேடிச் சென்று வற்புறுத்தினார். அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தனர்.

அங்கு கருத்துத் தெரிவித்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர், மக்களால் புதிய சந்தையில் இருந்த குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டன. சந்தையைப் பரிசோதித்து குறைபாடுகள் தொடர்பில் அறிக்கையிடப்பட்டன. குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று 25.05.2023 அன்று பிரதேச சபையால் அறிக்கையிடப்பட்டுள்ளது.

பிரதேசசபையின் அனுமதி இன்றி வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வது தவறு. தற்போது புதிய சந்தையில் குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ளதால் அங்கு வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முடியும் என்று சுட்டிக்காட்டினார்.

அனைவரும் புதிய சந்தையில் வியாபார நடவடிக்கையை மேற்கொள்வாராகளேயானால் புதிய சந்தையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்று கூட்டத்திலிருந்த வியாபாரிகள் சுட்டிக்காட்டினர்.

பிரதேசசபைச் செயலாளர் அதற்கு உறுதி வழங்கியதை அடுத்து, புதிய சந்தையில் அனைவரும் இணைந்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. (எ-ச-5)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி வாணிமலர் சுதர்சன்
அவர்களின் அன்புத் தாய்
**அமரர் பத்மாவதி செல்வநாதன்**
அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன்
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்பொருள்களுடன் நால்வர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்புத்துறை பகுதியில் போதைப் பொருளுடன் நான்கு பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த நான்கு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களை இன்று நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(அ-ம-20)

## விபத்துக்களைத் தவிர்க்க பொலிஸார் நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஜூன் 7

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விபத்துக்களைத் தவிர்க்கும் விதமாகப் பல்வேறு நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் ஒலிபெருக்கி வாயிலாக பொலிஸார் நேற்றையதினம் பல்வேறு அறிவுறுத்தல்களை மக்களுக்குவழங்கியமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. தவறான முறையில் வாகனம் நிறுத்துவதைத் தவிர்க்குமாறும், இறுக்கமானதும் பாதுகாப்பானதுமான தலைக்கவசங்களை அணியுமாறும் பொலிஸாரால் பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

'யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சுமார் 80 வீதமானவர்கள் போக்குவரத்து விதிமுறைகளைக்கடைப்பிடிக்காமலேயே வாகனங்களைச் செலுத்துகின்றனர். இது தொடர்பில் அடுத்தடுத்த தினங்களில் இறுக்கமாகக் கண்காணிக்கப்படும்' என்று பொலிஸார் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் முரண்பாடான சரத்துக்கள்!

### உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 7

உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'ஊழல் எதிர்ப்பு' சட்டமூலத்தில் அரசமைப்புக்கு முரணான விடயங்களை சபாநாயகருக்கு, உயர் நீதிமன்றம் தெரியப்படுத்தியுள்ளது.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாசகங்கள் திருத்தத்துக்குட்படுத்தப்படுமாயின், நீதிமன்றத்தால் குறிப்பிடப்பட்ட 'ஒத்திசைவாகாத தன்மை' இல்லாமல் போய்விடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

## விடுவிக்கக்கூடிய...

யாழ்ப்பாணத்தில் காணிகளை விடுவிப்பது தொடர்பான முக்கியமான கலந்துரையாடலொன்று. ஜனாதிபதியின் செயற்குழு பிரதானி சாகல ரத்நாயக்கா தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அத்துடன், காணிகளை விடுவிப்பது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளக் கூடிய குழு ஒன்றினை நியமிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு தரப்பினரையும் பொலிஸாரையும் உள்ளடக்கிய குறித்த குழு குறுகிய காலப் பகுதிக்குள், அதிகபட்சமாக விடுவிக்கக் கூடிய காணிகளை அடையாளப்படுத்த வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்தக் குழு வேறெந்த துறைசார் பணிகளிலும் ஈடுபடுத்தப்படாது என்றும் காணி விடுவிப்பில் மட்டுமே கவனம் செலுத்தும் என்றும் அடுத்த 30 நாள்களுக்குள் முன்னேற்றம் காண்பிக்கப்பட வேண்டும் என்றும் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

அதேபோன்று, வலி. வடக்கு பிரதேசத்தில் கடந்த 2013ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரசுடமையாக்குவது தொடர்பாக வர்த்தமானி வெளியிடப்பட்ட சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளில், சுமார் 3 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பதால், குறித்த வர்த்தமானியை உடனடியாக மீளப் பெறுவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன.

(அ-ம)

## நாட்டைவிட்டு...

மருதங்கேணியில் கஜேந்திரகுமார் கலந்துகொண்ட நிகழ்வை ஒளிப்படம் எடுத்தும் துப்பாக்கி முனையிலும் புலனாய்வாளர்கள் அச்சுறுத்தினார்கள் என்று முன்னணியினர் முன்னதாகக் குற்றஞ்சாட்டியிருந்தனர். எனினும், பொலிஸாரின் கடமைக்கு இடையூறாக முன்னணியினரே செயற்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்ததுடன், கஜேந்திரகுமார் உள்ளிட்ட சிலரைக் குற்றவாளிகளாகவும் பெயரிட்டுள்ளனர். இந்த விடயத்தில் இருவர் ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ளனர். கஜேந்திரகுமாரிடமும் வாக்குமூலம் பெறுவதற்காக மருதங்கேணி பொலிஸார் அழைப்பு விடுத்தனர். ஆனால், நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளச் செல்கின்றேன் என்று தெரிவித்த கஜேந்திரகுமார், பதில் சபாநாயகரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் எதிர்வரும் திங்கட்கிழமை வாக்குமூலத்துக்காக முன்னிலையாவதை உறுதிப்படுத்தியிருந்தார். அதை ஆரம்பத்தில் மருதங்கேணி பொலிஸார் ஏற்றுக்கொண்டபோதிலும், தற்போது கொழும்புப் பொலிஸாரின் உதவியுடன் (கஜேந்திரகுமார் கொழும்பில் உள்ளார்) எதிர்வரும் 8ஆம் திகதி வாக்குமூலம் பெற முன்னிலையாகுமாறு கஜேந்திரகுமாருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளனர். இந்த நிலையிலேயே இவை தொடர்பில் நாடாளுமன்றில் இன்றைய அமர்வில் சிறப்புரிமைப் பிரச்சினை எழுப்புவதற்கு கஜேந்திரகுமார் திட்டமிட்டுள்ளார் என்று தெரியவருகின்றது.

இதேவேளை - கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வாக்குமூலம் வழங்கும் வரையில், அவர் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு கிளிநொச்சி நீதிமன்றம் நேற்றுத் தடை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம,26)

## சந்தேகநபருக்கு...

இந்தப் படுகொலைகள் தொடர்பான வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது, மூவரிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன. இந்த நிலையில், சந்தேகநபரை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கஜநிதிபாலன் உத்தரவிட்டார். அத்துடன், வழக்கும் அன்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி அதிகாலை நெடுந்தீவில் 5 பேர் வெட்டிக் கொலை செய்யப்பட்டனர். சம்பவத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 101 வயது மூதாட்டியும் உயிரிழந்தார். உயிரிழந்தவர்களில் 4 பெண்களும் 2 ஆண்களும் அடங்குகின்றனர். (அ-ம-125)

## அரசவேலை...

மன்னார் மாவட்டத்தில், மாவட்டச் செயலகம் உள்ளடங்கலாக அரச திணைக்களங்களில் வேலை பெற்றுத் தருவதாக கூறி பெரியளவில் நிதிமோசடி இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் இருக்கவேண்டும் என்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார். மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அண்மைக்காலமாக மன்னார் மாவட்டத்தில் அரச வேலைவாய்ப்பு பெற்றுத்தருவதாகக்கூறி சில நபர்கள் இளைஞர், யுவதிகளிடம் பெருந்தொகை பணத்தைப் பெற்று மோசடி செய்துள்ளனர். குறிப்பாக மன்னார் மாவட்டச் செயலகம் உள்ளடங்கலாக மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி குறித்த குழுவினர் நிதி மோசடியில் ஈடுபட்டு வருவது தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இன்றுகூட (நேற்று) இவ்வாறு வேலை பெற்றுத் தருவதாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு திணைக்களத்தின் உயர் அதிகாரிகளோடு குறித்த மோசடிக்காரர்கள் கதைப்பதுபோல் தொலைபேசியூடாக கதைத்து பாசாங்கு செய்து மக்களை ஏமாற்றுவதான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது மட்டுமன்றி பொருள்கள் தருவதாக கூறியும் நிதி மோசடியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஆகவே, இது தொடர்பாக மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பிரதேச செயலகங்கள் அரச திணைக்களங்களில் நிதிகளைப் பெற்றுக் கொண்டு அரச வேலை வழங்கப்படுவதில்லை. அதற்கு எந்த ஏற்பாடுகளும் இல்லை.

இவ்வாறான நிதி மோசடிகளில் ஈடுபடுபவர்கள் உங்களைச் சந்திக்கும்போது உடனடியாக அவர்களுடைய அடையாள அட்டையை உங்களுடைய தொலைபேசியில் பதிவுசெய்து கொள்வதோடு உங்கள் அருகில் உள்ள கிராம அலுவலர்கள் அல்லது பொலிஸ் நிலையத்துக்குத் தகவல்களை வழங்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். இந்த மோசடிகள் இடம்பெறாமல் தடுக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகமிக அவசியமாகவுள்ளது - என்றார். (அ-ம)

## கோர விபத்தில்...

சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் விபத்தில் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த குணசெல்வம் நிகர்ஷன் (வயது-31) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதுண்டதிலேயே இந்த விபத்துச் சம்பவித்துள்ளது என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ம-22,27,20,26)

## வயோதிபப்...

யாழ்ப்பாணம், துன்னாலைப் பகுதியில், வயோதிபப் பெண்ணின் கழுத்தில் கயிற்றை மாட்டி, மயக்கமடையச் செய்த பின்னர் அவர் அணிந்திருந்த நகைகள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

குறித்த வயோதிபப் பெண், அயலில் உள்ள வளவில் மேய்ந்துகொண்டிருந்த தனது மாட்டைப் பார்க்கச் சென்றுள்ளார். இதன்போது அவரைப் பின்தொடர்ந்து வந்த கொள்ளையன் அந்தப் பெண்ணின் கழுத்தில் கயிற்றை மாட்டி மயக்கமடையச் செய்தபின்னர், அவர் அணிந்திருந்த நகைகளை அபகரித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளான். இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-20,125)

## அமைச்சர்...

உட்படுத்தவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் சிறீதரன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து மீண்டுமொரு ஆயுதக் கலாசாரத்தை தமிழர்கள் தூண்டக்கூடாது என வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி கருத்து வெளியிட்டுள்ளார். 2009ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழர் தரப்பில் இருந்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதா?, குண்டு சத்தங்கள் கேட்டனவா?, ஆயுதம் பற்றி அவர்கள் சிந்தித்துள்ளனரா? இல்லை. தமிழர்கள் அன்று ஆயுதம் ஏந்தினர் என்பதைவிட அவர்களை ஆயுதம் ஏந்திய நிலைக்குத் தள்ளினீர்கள் என்பதே உண்மை.

தங்களுக்கு நடந்த அநீதிகளுக்கு எதிராகவும், நீதி கோரியுமே அவர்கள் சர்வதேசம் வரை சென்று நம்பிக்கையுடன் போராடி வருகின்றனர். ஆனால் இங்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்மீது துப்பாக்கி வைக்கப்படுகின்றது. நீதி, நியாயத்துக்காகப் போராடும் ஒரு இனம் மிரட்டப்படுகின்றது. 'துப்பாக்கிகளை எடுப்போம், பொத்திக்கொண்டு இருங்கள்' என்ற எச்சரிக்கையையே வெளிவிவகார அமைச்சர் விடுத்துள்ளார்.

அலிசப்ரி போன்றவர்களுக்கு முதலில் புனர்வாழ்வளிக்கவேண்டும். ஆயுத கலாசாரம் பற்றி அலிசப்ரி கூறிய கருத்துகளைக் கண்டிக்கின்றோம். தமிழர் விடுதலைப் போராட்டத்தில் புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பு முக்கியமானது. அவர்களையும், தமிழக மக்களையும் ஒதுக்கிவிட்டுச் செயற்பட முடியாது' - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலந்துரையாடல்

சாவகச்சேரி, ஜூன் 7

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களாகக் கடமையாற்றும் பட்டதாரிகளை கடமை மேவுகை சமுர்த்தி முகாமையாளர்களாக நியமிப்பது தொடர்பான கலந்துரையாடல் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. தற்போது சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களாக பணியாற்றுவோரில் பட்டப்பின் படிப்பின் மூலம் பட்ட தாரியாக உள்ளோரே கடமை மேவுகை சமுர்த்தி முகாமையாளராக நியமிக்கப்படவுள்ளனர். இந்த நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் இ.சத்தியசீலன் கலந்துகொள்ளவுள்ளார். (எ-ரி2-9)

## கொடுப்பனவு தாமதம்: முதியோர் விசனம்

முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மே மாதக் கொடுப்பனவு இன்னமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. மே மாதக் கொடுப்பனவுக்குரிய காசோலை முதியோர் தேசிய செயலகம் மற்றும் மாற்றுத் திறனாளிகள் தேசிய செயலகம் போன்றவற்றிலிருந்து பிரதேச செயலகங்களுக்கு இன்னமும் அனுப்பப்படவில்லை. பயனாளிகள் அனைவரும் ஜூலை மாதம் தொடக்கம் வழங்கப்படவுள்ள நலன்புரித் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள நிலையில் மே மாதக் கொடுப்பனவுகள் இன்னமும் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் பயனாளிகள் தெரிவித்தனர். (எ-ரி2-9)


**Wanted**
**Shop for Rent / Lease**

நல்லூரடி, பலாலி வீதி அல்லது யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டுப் பிரயாணிகள் சஞ்சரிக்கும் பகுதிகளில் புடைவை வியாபாரத்துக்கு உகந்த வியாபார நிலையம் வாடகைக்குத் தேவை.


**077 827 0309**

## மணமகள் தேவை

01. கந்தர்மடம் - மானிப்பாய், இந்து கௌரவகுலம் (V) உத்தராடம். 1989. Masters Science in Biochemistry (Canada) கனடா. Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.பதிவெண் - 34257
02. உடுப்பிட்டி - கரணவாய், இந்து கௌரவகுலம் (V) அவிட்டம். 1990. BSc Engineering (Newzealand), Newzealand Citizen மணமகனுக்கு மணமகள் தேவை.பதிவெண் - 34184
03. மாவிட்டபுரம் - இந்து கௌரவகுலம் (V) விசாகம். 1984. Electrical Engineer Singapore Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33732
04. சுருவில் - வண்ணார்பண்ணை. இந்து கௌரவகுலம் (V) அச்சுவினி. 1987. BSc (Moratuwa), MSc (Australia), Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33541
05. திருநெல்வேலி - இந்து கௌரவகுலம் (V) ரேவதி 1985. Network Administration, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33507
06. கொடிகாமம் - Jaffna Town, இந்து கௌரவகுலம் (V) ஆயிலியம். 1980. Lowyer, Australia Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32385
07. மானிப்பாய் - இந்து கௌரவகுலம் (V) உத்தரம். 1974. Business Management (UK), Uk Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32102

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193

## 4ஆம் ஆண்டு நினைவு நாள்



உதயம் 26 . 09 . 1989
அஸ்தமனம் 22 . 05 . 2019

### ஜெகதீஸ்வரன் உமேஸ்

(நிறுவுநர் - Mr.k கணினி மையம்)

திதி:- தேய்பிறை சங்கடகரா சதுர்த்தி

நம்மை நீ பிரிந்து
ஆண்டுகள் நாலாகி விட்டன.
ஆறாத ரணங்களுடன்
நாமும் உன்னிடம் வர
நாளும் உன்னை அழைத்த
காலனிடம் கரம் கூப்புகின்றோம்
அவன் அழைக்கும் நாள் வரும் வரை
உன் நினைவாக நாம் செய்யும் பணிகள்
இனிதே நடைபெற உன் ஆசிகளை
வேண்டி நிற்கின்றோம்.

பெற்றோர்
திரு.திருமதி ஜெகதீஸ்வரன்

உமேஸ் ஞாபகார்த்த மண்டபம்,
இல.35, கிளானை வைரவர் கோயிலடி, கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை.

(CS/50669)AH-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை 120,000/= மட்டும்.

**தொடர்பு: 076 733 6047, 076 7558 606.**

# TECHNO WORLD
## தொழில்நுட்பக் கல்லூரி
(வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்)

**புதிய கல்வியாண்டு - A/L 2025**

திகதி : 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.30 a.m

**பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மாத்திரம் கொண்ட ஆசிரியர் குழாம்**

| | |
|---|---|
| • தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - ராகவன் (B.Sc)<br>முருகநிரோஜன் (B.Sc)<br>அச்சுதன் (B.Sc) |
| • பொறியியல் தொழில்நுட்பம் | - அருண்குமார் (B.Tech Hons (Eng)<br>சிவஜன் (NDT, HNDCT)<br>நிசாந்தன் (HNDE) |
| • உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | - திருக்குமரன் (B.Sc in Agri )<br>சுபாங்கன் (B.Sc in Agri)<br>பவனீதன் (B.Sc in Agri) |
| • தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் | - உமாகாந்தன் (BIT)<br>நஜன் (B.Sc) |
| • விவசாய விஞ்ஞானம் | - சாரங்கன் (B.Sc in Agri)<br>திருக்குமரன் (B.Sc in Agri)<br>சுபாங்கன் (B.Sc in Agri) |
| • புவியியல் | - S.S. கோகில் (B.A, P.G.D.E., M.Ed) |
| • ஊடகக் கற்கை | - கஜிதரன் - (B.A) |
| • கணிதம் | - கிரிசாந் |
| • சித்திரம் | - ஜெயந்தன் - (B.A) |

**தொடர்புகளுக்கு: 077 017 5346**


## மரண அறிவித்தல்

மண்ணில் 12 . 09 . 1983



விண்ணில் 05 . 06 . 2023

### சதீஸ்குமார் அனுசியா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சதீஸ்குமார் அனுசியா நேற்றுமுன்தினம் (05.06.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிறிஸ்கந்தராசா வேதநாயகி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற லிங்கநாதன் (கடவுள் - நயினாதீவு) மற்றும் பேரின்பச்செல்வி தம்பதியரின் அன்பு மருமகளும், சதீஸ்குமாரின் அன்பு மனைவியும், மிருதிகா, கவினாஸ், பிறணியா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்றவர்களான இலங்கேஸ்வரன், இலங்கேஸ்வரி மற்றும் சக்தி, கிருஸ்ணா, ஜெயந்தராஜ் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சுசிலாதேவி, கமலவேணி, ஜெயந்தி ஆகியோரின் பெறாமகளும், மகாலெட்சுமி, சரவணபவன் துவாரகா சிவறாஜினி, விஜயகுமாரன் தினேஸ்குமார் சர்மிலா, அர்ச்சனா ஆகியோரின் மைத்துனியும், பாலகுமார் சிவரூபன், மேகலா ஆகியோரின் சகலியும், சரணா, சரன் ஆகியோரின் சிறியதாயும், சமுத்திரா, கபிஷா, ஏமோஸ், அருனேஸ் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.06.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல.22, பொன்னம்பலம் வீதி, அரியாலையில் நடைபெற்று, பூதவுடல் சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS50725)N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : news@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.